போன் நெ. 15.　　விலை 2 அணா　　REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13　　22—8—54　　இதழ் 8

"மாதம் பத்தான பிறகுதான் குழந்தை பிறக்கும் என்பதை அறியாதவர்களல்ல, நாங்கள்! அவசரப்பட்டு, ஐந்து மாதமாகிவிட்டதே எங்கே குழந்தை, ஆறுமாதமாகிவிட்டதே காட்டு குழந்தையை என்று கேட்கும் பண்பற்றவர்களல்ல நாட்டு மக்கள். அவர்கள் சந்தேகப்படுவது, அடிவயிறு கனக்கிறதே! அது உண்மையாகவே கர்ப்பம்தானா அல்லது சூதகக்கட்டியா என்றுதான். கர்ப்பம் தரித்திருந்தால் அதற்கான அறிகுறிகள் தெரிந்திருக்கும்—வாய் குமட்டும், வாந்திவரும், மயக்கம் ஏற்படும் — இந்த அறிகுறிகள் எதையும் காணோம், இந்தக் காங்கிரசாட்சியில்! ஏழு ஆண்டுகள்தானே ஆகிவிட்டது? இதற்குள், எல்லாவற்றையும் செய்துவிட முடியுமா! பொறுத்துப் பாருங்கள்!! என்று போகுமிடமெல்லாம் புகல்கிறார், நேருபண்டிதர். அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆண்டு ஏழுக்குள் எல்லாவித வசதிகளையும் ஏற்படுத்திவிட முடியாதென்பது உண்மைதான். குழந்தை பிறக்க, மாதம் பத்து ஆகத்தான் வேண்டும். ஆனால், நாட்டுமக்களெனும் கணவன் தெரிந்துகொள்ள விரும்புவது, மனைவிக்கு உண்மையில் கர்ப்பமா, இல்லையா என்பதுதான்! அந்த அறிகுறிகளே,—ஏதாவது ஒன்றிரண்டு காரியங்களாவது, நன்மை ஏற்படப்போகிறது என்பதற்கான அறிகுறியாவது, தென்படுகிறதா என்று பார்த்தால், எதுவுமே தெரியவில்லை. ஆனால், வயிறோ உப்பிக்கொண்டே போகிறது! கணவன் சந்தேகப்படாமலா, இருக்கமுடியும்? அனுதினமும், முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்துவிட்டது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம், என்று பேசுகிறது, சர்க்கார். இதுமுடிந்துவிட்டால், நாடு, சோலையாகும் என்று சொல்கிறார்கள்! குழந்தை பிறக்கும் என்பதற்கான அறிகுறி எங்கே என்று கேட்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்துக்கென ரூபாய் இரண்டாயிரம் கோடி, செலவாம்! வயிறு தாங்க முடியாத கனமாகத்தான் தெரிகிறது!! ரூபாய் இரண்டாயிரம் கோடி...எங்கே, அறிகுறி? இதனால் ஏற்பட்ட பலன் என்ன? பத்தாயிரம் பேருக்காவது திராவிடத்தில் வேலை கொடுக்கமுடிந்தது என்று சொன்னால்—மக்கள், நம்பமுடியும்—குழந்தை பிறக்கும் என்பதை! அது இல்லாமல், பிறக்கும் என்று சொல்லிக்கொண்டேயிருந்தால், கர்ப்பம் என்று எண்ணுவானா—சூதகக்கட்டியென்று சந்தேகப்படுவானா, நாட்டு மக்கள் என்கிற கணவன்? நீங்களே, சொல்லுங்கள்! யாருக்குத்தான் சந்தேகம் வராது? புத்திசாலிக் கணவன், மனைவியை, டாக்டரிடம் அழைத்துப்போகத்தானே விரும்புவான்?"

ஆரணியில்!

[நிருபர்]

கைகொட்டிச் சிரித்தனர், மக்கள்! தரப்பட்ட உவமானத்துக்கும் நாட்டையாள்வோரின் போக்குக்கும் இடையிலிருக்கும் ஒற்றுமையை எண்ணும்போது யார்தான் சிரிக்காமலிருக்க முடியும்? ஐந்து பேர் இருந்து ஆண்ட டில்லியிலே, இன்று கால்நூறுபேர் 'கனம்'களாகயிருக்கிறார்கள்! மூவர் இருந்த சென்னையிலே முக்கால் டஜன்பேர் இருக்கிறார்கள்! அழியும் பணமும் கொஞ்சமல்ல; அரசாங்க மாளிகைகளில் வழிந்தோடும் செலவும், இலேசானதல்ல. ஆனால், நாடாள வந்தோர், நாள்தோறும் கூறுவது — ஜனங்களுக்குப் பொறுமையில்லையாம்! பொறுத்துப் பார்த்தால், கிடைக்கப்போகும் புதையல் தென்படுமாம்! செல்லுமிடந்தோறும் செப்புகிறார் நேரு பண்டிதர்; அவர்தம் சீடகோடிகளும், கர்ஜிக்கின்றனர், அதுபோல. மக்கள் பொறுத்திடக்கத் தயாராயிருப்பார்கள்! ஆனால், குழந்தை பிறக்கும் என்கிற நம்பிக்கை வேண்டுமே? தெரிகிறதா, அறிகுறி? அதை எண்ணித்தான், கேட்டார், பொதுச் செயலாளர்!

*

"நாலைந்து ஆண்டுகளாக, மக்கள் பணியாற்றும் யாவரையும், கட்சி பேதமின்றி வரவேற்று வாழ்த்த வேண்டும் என்கிற மனோபாவம் மலர்ந்து வருவதைக் காண்கிறேன். இது, நல்ல எதிர்காலத்துக்கு அறிகுறி. அதனால்தான், என்போன்றோருக்கும், இது போன்ற நகராட்சி மன்றங்களிலே வரவேற்பு அளிக்கப்படுகிறது", என்று ஆணி

நகராட்சி மன்றத்தினர் ஆக-14-ந் தேதி வழங்கிய வரவேற்பினைப் பெற்றுக் கொண்டு பிரிதோர் இடத்திலே நடைபெற்ற கழகக்கூட்டத்தில், பேசியபோது கூறினர். அன்பும் பண்பும் போட்டியிட, அன்று மாலை, வரவேற்புக்கென அலங்கரிக்கப்பட்ட தனிப் பந்தலிலே, ஆரணி நகராட்சி மன்றத்தினர், வரவேற்புரையொன்று வாசித்தளித்தனர். அதற்குமுன்பு, நகராட்சித்தலைவர் தோழர் சீனிவாசமுதலியார் அவர்களால், தேனீர் விருந்தொன்றும் அளிக்கப்பட்டது. விருந்தும் வரவேற்பும், 'வேண்டிய வரத்தை'ப் பெற அல்ல! அதற்கு நாம், மந்திரிமார்களுமல்ல!! ஆனால், அன்புடன் நமது கழகப்பணியின் அருமையைப் பாராட்டும் பண்புடன், செய்தனர்—அவர்கள். அதனை, அளித்த வரவேற்பிதழிலும் குறிப்பிட்டிருந்தனர். கழகத்தின் மூலம் நாம் செய்யும் பணிக்கு, மக்கள் மன்றங்களிலேயிருந்து வாழ்த்துரை வரும்போது, மகிழாமலாயிருக்க முடியும்? திராவிடமாவது! நாடாவது!! — எனச் செப்பலாம். பொதுப்பணியாவது! புடலங்காயாவது!!—என்று, எரிச்சலைக் காட்டுவோரும் இருக்கலாம். எனினும், அவைகளுக்கு மேலாக, மக்கள் மன்றங்கள் நமது பணியினைப் பாராட்டுகின்றன! கொள்கைக்கு, தமது வரவேற்பை வழங்குகின்றனர்!! ஆரணி நகராட்சி மன்றம், நமது கழகக் கோட்டம் அல்ல. எனினும், இந்நிகழ்ச்சி! எனவே தான் வரவேற்பைப் பெற்றுக் கொண்ட பொதுச்செயலாளர், மாச்சரியங்களை மறந்து பணியின் அளவையும் விளைவையும் மதிக்கும் மனப்பண்பு நாலைந்து ஆண்டுகளாக வளர்ந்துவரும் நிலையைக் குறிப்பிட்டார். இந்தப்பண்பு இல்லையென்றால், காந்தியார் சிலையினைத் திறக்க வேலூர் நகராட்சியினர் விரும்பியிருப்பார்களா! கூடாது எனக் கொட்டம் போட்டோருக்கு காங்கிரஸ் தலைவர்களே புத்திமதிகூறிய கட்டம் ஏற்பட்டிருக்குமா!! அந்தப் பண்பு, இதுவரை வளராத காரணத்தினால்தான், 'லேபிள்' காரணமாக அடிதடியும், அரிவாள்வெட்டுகளும் கொலை கொள்ளைகளும் வாயடியும் கையடியும், அரசியலில் அடிக்கடி தலைவிரித்தாடுகின்றன. அதனையும், குறிப்பிட்டார் பொதுச் செயலாளர்! "தான்பிடித்த கொள்கையே சரியென்னும் பிடிவாதத்திலிருந்தோரும், விஷயம் விளங்கியபின், எங்களுக்கு ஒத்துழைப்புத்தர முன்வந்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு மறைந்த திரு வி. க. அவர்களையே குறிப்பிடுவேன். தென்னாட்டில் காங்கிரசை வளர்த்த, மூவர்களில் ஒருவர், அவர். பாரததேசம், ஒன்றாகவே யிருக்கவேண்டுமென்பதற்காகப் பலகாலம்பாடுபட்டவர்! இந்திய உபகண்டத்திலேயே முதல் முதலாகத் தொழிலாளர் இயக்கத்தை உண்டாக்கிய பெருமைக்குரியவர், அவர். இன்றையதினம், ஏராளமான தொழிலாளர் தலைவர்கள், நாட்டிலே இருக்கிறார்களென்றால் அதற்கு மூலகாரணம், திரு. வி. க. தான். அப்பேற்பட்டவர் தன்னுடைய அந்திய காலத்திலே எங்களது லட்சியத்தை ஏற்றுக் கொண்டார். திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும்!—என்கிற நோக்கத்தை ஆதரித்தார். ஈரோட்டிலே நடைபெற்ற மாநாட்டுக்கு வந்து, இதற்கு, தக்க ஆதாரங்களைச் சொல்லி, அவசியம் நாடுபிரிந்தாக வேண்டும், என்று வலியுறுத்தினார். அவர், ஒரு சைவர்தான்! சமய விஷயத்தில் எங்களுக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமைஉண்டு!! என்றாலும், இந்த விஷயத்தில், தன்னுடைய ஆதரவுண்டு என்று சொன்னார். என்ன காரணம்? நாங்கள்கேட்கும் திராவிடநாட்டின் லட்சியம் சரி என்பதால்!! ஆகவே, உண்மை புலப்படும்போது, கட்சிமாச்சரியங்கள் தூர விலகிவிடும்—ஆத்திரமும் கோபமும் அகலும். அதனால்தான், இத்தகைய பண்பு வளர்கிறது என்பதைக் காணும்போது, மகிழ்கிறேன்," என்றார், நகர மண்டபத்தில் விளங்கப்போகும், திரு. வி. க. படத்தைத் திறந்து வைத்தபோது.

தேவை

இலங்கையில் (யாழ்ப்பாணம் நீங்கலாக) எல்லா இடங்களிலும் "திராவிட நாடு" விற்பனை செய்வதற்கு முன்பணம் (Deposit) கட்டக் கூடிய ஏஜண்டு தேவை விபரங்களுக்கு உடனே எழுதவும்.

மானேஜர்
திராவிட நாடு
காஞ்சிபுரம். S I.

உண்மைதானே! நாட்டிற்கு நல்லது செய்வதற்காகப் புறப்படும் கட்சிகள், வந்தவேலையை மறந்து, சொந்த வேலையிலீடுபட்டு, நேரத்தையும் நினைப்பையும் எவ்வளவு பாழ்படுத்திக் கொள்ளுகின்றன, இன்று! கொள்கைபற்றி கவலைப்படாமல், கூறுவோன் யார்? உயரம் என்ன?—ஆள் கனமா, இல்லையா—என்பதுபோன்ற அபூர்வ ஆராய்ச்சிகளிலே தானே ஈடுபடுகின்றன! அதுவா, தேவைநாட்டுக்கு? அதைத்தானா, நாடு, எதிர்பார்க்கிறது, அரசியல் கட்சிகளிடமிருந்து! வயலில் உழுவோரும், ஆலையில் சுழல்வோரும், அவதிப்படும் கண்களைத் தூக்கிப்பார்ப்பது—சுமை குறையாதா! இன்பம் வாராதா!! என்பதற்குத்தான். இதனை எங்கே எண்ணுகின்றனர்; இங்குள்ள மாற்றார். நாகல் நடையில் பேசவும், ஏசவும் முற்படுகின்றனர். இது, எதைக் காட்டுகிறது?

*

"சோர்ந்துபோன கணவன், மனைவிக்கேற்பட்ட நிலை கண்டு, டாக்டரை நாடிச் செல்கிறான்! அவதிப்பட்ட மக்கள், ஆட்சியின் அலங்கோலம் கண்டு, எங்களை நாடி வருகிறார்கள். இந்த உண்மையை உணராது, ஏதேதோ கூறுவதால் பயன் என்ன? ஆட்சியின் அலங்கோலத்தைக் கண்டுபிடித்துச் சொல்கிறோம், நாங்கள்! அதுபோக்கும் மருந்து தருகிறோம்!! அது ஏற்பட்டதற்குரிய காரணத்தையும்

(13-ம் பக்கம் பார்க்க)

மக்கள் நல ஆட்சி

இருதயராஜ் M.A

பிரிட்டனில், சமூக நலன்களுக்காக ஒரு ஆண்டில் செலவிடப்படும் (255,00 000,000 ரூபாய்) தொகையாகும். இது அவ்வளவையும் பணக்காரர்களிடமிருந்துமட்டுமே பெற முயர்சித்தால், அந்த ஒரு சில பணக்காரர்களும் தொடர்ந்து எத்தனை ஆண்டுகளுக்கு அவ்வளவு பெரிய வரிப்பளுவை சுமக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் தொடர்ந்து வரி கொடுக்க வேண்டுமென்று விரும்பினால் அவர்களிடம் ஒரு அளவுக்குமேல் வசூலிக்கக்கூடாது. அதனால் அவர்களை லேசாக விட்டுவிடவேண்டும் என்பதும் அர்த்தமில்லை.

பணக்காரர்களிடமிருந்து வரி வசூலிப்பதோடு, தொழிலாளர் சமூகத்தில் நோய், வேலையின்மை, தள்ளாத வயது இவைகளால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய அந்தச் சமூகத்திலேயே நல்ல நிலைமையிலுள்ளவர்களிடமிருந்தும் ஒரு கணிசமான அளவுக்கு வசூலிக்க வேண்டும் ஒரு சமூகத்தை எப்பொழுதுமே மற்றொரு சமூகம் காப்பாற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பது சரியல்ல. ஒரு சமூகத்திற்கு நன்மை செய்வதற்கு மற்றொரு சமூகத்தைப் பாழாக்குவதும் அநீதியாகும்.

அத்துடன், எப்படித் தொழிலாளர் சமூகத்துக்கு அதைவிட நல்ல நிலைமையிலிருக்கும் பணக்காரர்கள் சமூகம் கொடுத்துதவவேண்டும் என்று சொல்லுவது நியாயமோ, அதுபோலவே, தொழிலாளர் சமூகத்திலேயே கஷ்டப்படும் தொழிலாளிக்கு நல்ல நிலையிலிருக்கும் தொழிலாளர் சகோதர மனப்பான்மையில் ஓரளவுக்காவது உதவி செய்யத் தயாராயிருக்கவேண்டும்.

இவ்விதம்தான் பிரிட்டனில் சமூக நலன் அபிவிருத்திக்காகத் தொழிலாளர் சமூகத்திலிருந்து ஓரளவும், அத்துடன் பணக்காரர்களிடமிருந்து ஓரளவும், பணம் வசூலித்துச் செலவு செய்யப்படுகிறது.

அப்படியிருந்துமே பிரிட்டனில் பிரமிக்கத்தக்க விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. 1939க்கு முன்னால் ஆண்டுக்கு 90,000 ரூபாய் வருமானம் உடையவர்கள் 6560 பேர் இருந்தார்கள். 1949ல் அதே அளவு வருமானம் உடையவர்கள் 86 பேர் தான் இருந்தார்கள்.

1939ல் இருந்த விலைவாசிகளோடு 1946ல் இருந்த விலைவாசிகளை ஒப்பிட்டால், 1946ல் விலைவாசிகள் இரட்டிப்பாயிருந்தன. அதனால் 1946ல் 90,000 ரூபாய் வருமானம் 1939ல் 45,000 ரூபாய் வருமானத்துக்கு சரியாயிருந்திருக்கும், அதாவது 1946ல் 90,000 ரூபாய் வருமானத்தைக்கொண்டு ஒருவன் பெறக்கூடிய வசதிகளை 1939ல் 45,000 ரூபாய் வருமானத்தைக் கொண்டே பெற்றிருக்கலாம். அப்படிப் பார்க்கும்போது 1939ல் பிரிட்டனில் 45,000 ரூபாயும் அதற்குமேலும் வருமானமுடையவர்கள் 40,000 பேர் இருந்தார்கள். 1939ல் 45,000 ரூபாய் வருமானமுள்ள அந்தஸ்துள்ள 40,000 பேர் இருந்த இடத்தில் 1946ல் அதே வசதியுடன் இருப்பதற்கு தேவையான 90,000 ரூபாய் வருமானமுள்ளவர்கள் 86 பேர்தான் இருந்தார்கள்.

பணக்காரர்கள் தொகை இவ்வளவு குறைந்துவிட்டதே என்று யாரும் கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. பணக்காரர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதால் பிரிட்டனில் பூகம்பம் ஏற்பட்டுவிடவில்லை.

ஆனால் இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, ஒரு பிரஜையின் சொத்துரிமையோ, சொத்துச் சேர்க்கும் உரிமையோ அழிக்கப்படவில்லை. அபரிமிதமான வருமானம் வருவதைத் தடுக்கவில்லை. அவ்வித வருமானம் வந்தால் அதில் பெரும்பங்கை அரசாங்கம் வரியாக வசூலித்துவிடுகிறது. முதலாளித்துவம் தனித்தொழில் நடத்தும் உரிமை பறிக்கப்படவில்லை. முதலாளித்துவப் போர்வையில் அபரிமிதமான செல்வத்தை ஒரு தனிக் கூட்டம் சேமித்துக் கொண்டிருப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. 4½-கோடி மக்களில் 40,000-பேர் மட்டும் மிகச் சவுகரியமான விரும்பப்பட்ட எல்லா வசதிகளும் நிரம்பிய வாழ்க்கைக்குத் தேவையானதற்கும் மேலாக அதிக வருமானம் அடைந்துவந்த விபரீதத்தை விலக்கியிருக்கிறது.

ஒரு நாட்டில் ஒரு சிலர் எப்பொழுதுமே அவர்கள் தேவைக்கும் அதிகமாகவே கேக், ஒயின் என்று சாப்பிட்டுக்கொண்டும், அதே நேரத்தில் லட்சக்கணக்கான பேர் அரைப்பட்டினி கால் பட்டினியாகச் சீமான்களின் வீட்டில் சீராட்டிப் பாராட்டி செல்லமாக வளர்க்கப்படும் நாய் பூனை இவைகளுக்குக் கிடைக்கும் உணவு கூட, அரை ரொட்டித் துண்டுகூட இல்லையே என்று ஏங்கித் திரியும் கேவல நிலை இப்பொழுது பிரிட்டனில் இல்லை. பலர் பட்டினியால் வாடி உயிரைக் காப்பாற்ற வழியின்றித் தவிக்கவும் ஒரு சிலர் எப்பொழுதுமே அதிகம் உண்டுவிட்டுப் பிறகு தேக எடையைக் குறைக்கவும், வயிற்று வலியைப் போக்க மருந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதுமான நிலை இப்பொழுது பிரிட்டனில் இல்லை.

எல்லோருக்கும் வயிறார உணவு எல்லோருக்கும் தேவையான நியாயமான வசதிகள்—சவுகரியமான வாழ்க்கைக்கு வேண்டிய பாதுகாப்புகள். வறுமை என்பது விரட்டப்பட்டுவிட்டது. ஆனால் அவரவர்கள் சொந்த முயற்சியில் பொருளீட்டவோ, சேமித்து வைக்கவோ அனுமதிக்கப்படுகிறார்கள். ஓரளவுக்கு மேல், உதாரணமாக ஆண்டுக்கு 90,000-ரூபாய்க்கு மேல் வருமானம் உடையவர்களின் எண்ணிக்கை அதாவது மிதமிஞ்சிய சொத்து உடையவர்களின் எண்ணிக்கைதான் வரவரக் குறைகிறது.

மிதமிஞ்சிய சொத்து உடையவர்களின் தொகை குறைகிறதே தவிர, அவர்களை வாழவிடாமல் அடிக்கவில்லை அரசாங்கம்.

ஓரளவுக்குமேல் சம்பாதிக்கக்கூடாது என்று சட்டம் செய்துவிடவில்லை. ஒரு அளவுக்குமேல் வருமானம் வந்தால் அதில் பெரும்பங்கை அரசாங்கத்துக்கு வரியாகக் கொடுக்கவேண்டும். அம்மாதிரிப் பெறும் வரிப்பணத்தை அல்லல்படுபவர்களுக்கு ஆதரவளிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் பயன்படுத்துகிறது.

ஒரு சிலர் விரும்புவதுபோல், சமத்துவம் என்ற பெயரால், எல்லோருக்கும் ஒரே விதமான வருமானம் என்று விதி ஏற்படுத்தாமல், மக்களுக்குள் இயற்கையாக இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துவிடாமல், ஆனால் இந்தமேடு பள்ளங்கள் சமுதாயத்தில் குறைவதற்கு வழி செய்து, ஓரளவுக்குமேல் சொத்து சேர்வதைத் தடுத்து ஒரு நியாயமான வாழ்க்கை வரம்புக்குக் கீழே யாரும் விழுந்துவிடாமல் காப்பாற்றுவதே மக்கள் நல ஆட்சி.

*

மக்கள் நல ஆட்சி என்ற இலட்சியம் பொருளாதாரத் துறையில் புதியதொன்று. இன்று பலராலும் பேசப்பட்டுவரும் இலட்சியம். சமதர்மம்—உண்மையான சமதர்மம்—வாழவேண்டும், பிறர் வாழ்வைக் கெடுக்காமல், — ஏழைகள் இன்புற வேண்டும், ஆனால் சீமான்களின் சொத்தைப் பறிமுதல் செய்து அல்ல—இவைகள்தான் இந்தப் புது இலட்சியத்தின் அடிப்படைத் தத்துவம்.

முதலாளித்துவத்துக்கு முடிவான பதில்பொதுவுடைமை என்று நினைப்பவர்களும் உண்டு. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் முளைக்கும் கொடுமைகளைக் களைய பொதுவுடைமைப் பொருளாதார அமைப்புதான் அவசியம் என்று நம்புகிறவர்கள் முதலாளித்துவத்தைஒழிக்காமலும் சீர்திருத்தவோ செப்பனிடவோ முடியாது—அதை வேரோடு களைந்தால்தான் முடியும் என்று நினைக்கிறார்கள்.

மக்கள் நல ஆட்சி, தற்பொழுது உலகில் பெரும்பகுதியில் இருந்துவரும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பை வைத்துக்கொண்டே ஆனால் அதன் விஷப்பல்லைமட்டும் பிடுங்கிவிட்டு அதைச் சீரமைத்து புதிய சமுதாயத்தை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் பிறந்தது.

முதலாளித்துவப் பொருளாதாரம் ஏன் இன்று மக்களால் வெறுக்கப்படுகிறது? அதை மாற்றி அமைக்கவோ அல்லது பொதுவுடைமை வாதிகள் விரும்புவது போல் அதைவேரோடு அழிக்கவோ அவசியம் என்ன?

இந்தப் பொருளாதார அமைப்பில் தனிமனிதனின் சுதந்தரம் போற்றப்படுகிறது முதலாளித்துவத்தின் எதிரிகள் சொல்லுவது போல் ஒரு சிலர் பெரும்பான்மையோரை "சுரண்டு"வதற்குக்கூட சுதந்திரம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஒருவரோடொருவர் போட்டியிடவும் சுதந்தரம் இருக்கிறது. அதனால்தான் முதலாளித்துவத்தைப் போட்டிப் பொருளாதார முறை என்றுகூடச் சொல்லுகிறோம். இதன் விளைவு என்ன?

ஒரு முதலாளி தான் விரும்பிய தொழிலைத் துவக்க, எத்தனை தொழிலாளரை வேண்டுமானாலும் வேலையிலமர்த்திக் கொள்ள, விரும்பிய பொருளை உற்பத்தி செய்ய, உற்பத்தி செய்த பொருளை எங்காவது, யாருக்காவது எந்த விலைக்காவது விற்றுக்கொள்ள, எந்தக் காரியத்திலும் தன் லாபம் ஒன்றே குறியாகக்கொண்டு சுதந்தரத்துடன், ஆனால் சாதாரண சமூக சட்டவரம்புகளுக்கு உட்பட்டு நடக்க அனுமதிக்கப்படுகிறான், முதலாளித்துவ அமைப்பில்.

எந்தத் தொழில் லாபகரமாயிருக்கிறதோ அதில் பல முதலாளிகள் நுழைவார்கள். அதனால் அந்தத் தொழிலில் உற்பத்தி அதிகரிக்கும். மக்கள் தேவைமேல் உற்பத்தி பெருகினால் விலை இறங்கும். அதனால் லாபம் குறையும். எந்த முதலாளி குறைந்த விலைக்கு உற்பத்தி செய்ய முடியாமல் நஷ்டம் அடைகிறானோ, அவன் அத்தொழிலை விட்டு விடுவான். இந்த முறைப்படி எந்தத் தொழிலிலும் குறைந்த விலைக்குத் தயார் செய்யக்கூடிய முதலாளிகள் மட்டுமே இருப்பார்கள். ஒவ்வொரு முதலாளியும் சிக்கன முறைகள், நூதனவழிகள் இவைகளைக் கையாண்டு எப்படியாவது மற்றவர்களை விடக் குறைந்தவிலையில் விற்பதற்கு முயற்சியெடுப்பான். அதனால் முதலாளித்துவ அல்லது போட்டிப் பொருளாதார முறையில் சாமான்களின் விலைகள் குறைவாகவே இருக்கும்.

ஆக, முதலாளிகள் தங்களுக்குச் சுதந்தரம் இருக்கக் காண்கின்றனர். அவர்களுக்குள் போட்டியானது புது உற்பத்தி முறைகள் தோன்றி அதனால் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி ஏற்படுகிறது. அதன் விளைவாக மக்கள் மலிவானபொருள்களை வாங்கி உபயோகிக்க முடிகிறது.

தொழிலாளர் தமக்கு விருப்பமான தொழிலில் சேரவும், வேண்டும்போது அதைவிட்டு விலகி வேறொரு தொழிலுக்குப் போகவும், இந்த அமைப்பில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒன்றுகூடித் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு அவை மூலம் தம் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனால் நடைமுறையில் முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளச் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர். அரசாங்கத் தலையீடு அவசியமாகிறது.

(இன்னும் வரும்)

ஏழாண்டுகள்!
எவ்வளவு பெரிய வீழ்ச்சி

அழைத்திருந்தார், அவர்! திகைத்தேன்!!

அழைத்தவர், ஒரு தாசில்தார்! அதனால் ஆச்சரியப்பட்டேன்!!

ஆகஸ்டு 15 சுதந்திர தினத்துக்கான, அழைப்பு அது. கலெக்டர் கொடியேற்றுகிறார்! போலீசார் அணிவகுப்புண்டு!!—என்று குறிக்கப்பட்டிருந்தது, அந்த விளம்பரத்தில்.

விளம்பரம், சினிமா 'ஸ்லைடு' மூலம் காணக்கிடைத்தது, எனக்கு.

*

ஏழாண்டுகள் முடிந்துவிட்டனவாம்! எட்டாம் ஆண்டு ஆரம்பமாம்! தேசிய ஏடுகள், வழக்கம்போல, 'மலர்கள்' வெளியிட்டுவிட்டன. புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன்; மணமில்லா, மலர்கள்! எந்த ஏட்டிலும், ரசமில்லை! இருந்தால்தானே, அகப்பையில் வர? வானொலியிலும், வழக்கம்போல, 'ரிகார்டுகள்' தான்! அதிலும் ஒரே பாட்டை—மூன்று பேர் பாடின ரிகார்டுகள். திருப்பித் திருப்பி, 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்பதைப் பாகவதரும், சுப்புலட்சுமியும், மறைந்த வசந்தகோகிலமும், எப்படிப் பாடியிருக்கின்றனர் என்பதைக் காட்டுவதுபோல, வைத்தனர். இதற்குக்கூடவா, பஞ்சம் என்று எண்ணிற்று உள்ளம்?

*

கூட்டமாம்—போனேன்! அன்பர் ஒருவர் மேடையில் அமர்ந்திருந்தார்—காதுகளில் வைரக்கடுக்கன்—கழுத்திலே ஜரிகை வஸ்திரம்—அருமையான மில்சட்டை—அவர் கூட்டத் தலைவராம்! ஆச்சரியம் மீண்டும் அதிகமாயிற்று. ஏற்றப்பட்டிருந்தகொடியைப்பார்த்தேன்.

மூவர்ணக் கொடி! அதனருகே அவர்!! கட்டைவிரலால்கூடத்தொட்டுப் பார்த்ததில்லை, அவர். தலைமை வகிக்கிறாராம்! 'இதென்ன கூத்து!', என்றேன்பக்கத்திலிருந்தவர், மெதுவாகச் சொன்னார், 'பணம் பாதாளம் வரை பாயும்' என்று!

* * *

"பத்தாயிரம் ரூபாய் செலவழிப்பது தேவையா?"

"அந்தத் தொகையே, கொஞ்சம் என்பது எங்கள் எண்ணம். அடுத்த வருடம், இன்னும் அதிகமாகச் செலவு செய்யப் போகிறோம்"

* * *

சட்டசபையில் நிதி அமைச்சர், இவ்விதம் சொன்னார்! நாட்டிலோ, நாம் இப்படிக் காட்சிகளைக் காண்கிறோம்!! அதிகச் செலவால், சுதந்திரதினத்துக்கு அந்தஸ்துண்டாக்கப் போகிறாராம், அன்பர் சுப்ரமணியம்! அனுவசியமாகப் பேசுவதில், அவருக்கு நிகர் அவர்தான்!! அதிகச்செலவு செய்யப் போகிறாராம் — எதற்கு?—சுதந்திர நாளை கொண்டாடுவதற்கு!

"ஐயா! ஆங்காங்கும் மக்கள் கஷ்டப்படும்போது, இப்படிப் பணம் செலவு செய்யவேண்டுமா?"

"அதற்காக, சுதந்திர தினத்தின் பெருமையைக் கொண்டாடாமல் இருக்கமுடியுமா?"

பெருமையைக் கொண்டாடவேண்டுமாம்! அதற்காக......அதிக செலவுசெய்யவேண்டுமாம்!! கேட்டவர், உறுப்பினர். பதிலுரைத்தவர், அமைச்சர்.

உறுப்பினரின் கண்முன், கஷ்டப்படும் மக்கள் தெரிகிறார்கள்!

அமைச்சரோ, 'அதற்காக......' என்று கேட்கிறார்!!

மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக, சுதந்திர தினத்தை அதிக விமரிசையாக கொண்டாடாமலிருக்கமுடியாதாம். சொல்வது, சுப்ரமணியம்—அமைச்சர்!

உறுப்பினர் கேட்கவில்லை—"சுதந்திரம் யாருக்காக? மக்களுக்காகவா! உங்களுக்காகவா!!" என்று. கேட்டிருந்தால், என்ன பதிலைச் சொல்ல முடியும்? ஆமாம்! எங்களுக்காகத் தான்—என்று சொல்வார். நிச்சயம் சொல்லமாட்டார். ஆனால், ஆத்திரப்பட்டிருப்பார். ஏனெனில், அவருக்கு உண்மையைச் சுட்டிக் காட்டும்போதெல்லாம் கோபம் வருமாம்! இப்போதும் கோபம் வந்திருக்கும்—ஆனால், மக்களுக்கு ஒரு விஷயம் விளங்கியிருக்கும். இந்தக் காங்கிரஸ் சர்க்காருக்கு, விழா, வேடிக்கை யென்றால் பிடிக்குமளவுக்கு, நாட்டின் நல்லாட்சி பிடிக்கவில்லை என்பது. ரூபாய் பத்தாயிரமாம்! சென்னை நகரில் சுதந்திர விழா கொண்டாடவாம்!! பத்து ஆயிரமும், விளக்கு வெளிச்சமாகவும், கொடி தோரணங்களாகவும் பாறியிருக்கும். அதன்கீழே, முகத்திலே ஒளியில்லாதவனும், கட்ட அரைமுழத் துணியில்லாதவனும், நின்றுகொண்டு வேடிக்கை பார்ப்பான்! அதற்கு ரூபாய் 10,000 செலவழிக்கப்படவேண்டுமாம்! இந்தத் தொகையும் கொஞ்சமாம்—அடுத்த ஆண்டுமுதல் அதிகம் செலவழிக்கப் போகிறாராம்.

பணச்செலவில், பரமானந்தத்தைக் காணப்போகிறேன், என்கிறார், அமைச்சர்! நாட்டிலோ, நான் இப்படிப்பட்ட காட்சிகளைக் காண்கிறேன்!! *

அடடா! 1947 ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று!! கவனப்படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஊரும், என்ன அமர்க்களப்பட்டன. அன்று நான் சென்னையிலிருந்தேன்! ஆர்ச்சிபால்டுநை — அப்போது சென்னை கவர்னர்—மன்றோ சிலையின் கீழ், பெற்ற ராணுவ மரியாதை என்ன — அவரைச் சுற்றி, நமது காங்கிரஸ் அமைச்சர்கள் நின்ற அழகென்ன — அதைக் கண்டுகளிப்பதற்காக ஜிம்கானா மைதானத்தில் திரண்டிருந்த மக்கள் என்ன — கர்ஜனையெழுப்பிய காங்கிரஸ் தலைவர்கள் எத்தனைபேர் — புது ஒளி பூத்த முகத்தினராய், காங்கிரஸ் தொண்டர்கள் வலம் வந்த அழகென்ன—இன்று காங்கிரஸ் அமைச்சர் அந்தக் காரியங்களையெல்லாம், பணத்தைக்கொண்டு சாதிக்கப் போவதாகக் கூறும் விசித்திரமென்ன!!

ஏழு ஆண்டுகள்!! இதற்குள்ளே, எவ்வளவு பெரிய தலைகீழ் மாற்றம்.

சுதந்திரம்!— எளிய சொல்லா? எளிதாகத்தான் கிடைத்ததா? எவ்வளவு பேரின் தியாகஜோதியிலே பூத்தது அந்தப் பொன்மலர்!! செக்கிழுத்த சிதம்பரம்—வீதியிலே வீழ்ந்த திருப்பூர் குமரன்—வள்ளியம்மாள். ஜாலியன் வாலாபாக்—தண்டியாத்திரை— கடுங்காவல்—தூக்கு தண்டனை, அப்பப்பா!—எவ்வளவு இக்கட்டுகளுக்குப் பிறகு, மலர்ந்தது அந்தச் சொல்! எவ்வளவு விரைவில் உலர்ந்துபோய்விட்டது இன்று. களித்த முகங்களிலே சோகம்! குதூகலித்த இதயங்களிலே வேகம்! ஆடிப்பாடிய நெஞ்சங்களிலே ஆத்திரம்! ஏழையின் இதயத்திலே ஏமாற்றம்!—எவ்வளவு பெரிய மாற்றம்? கொடிதூக்கிய கோதண்டம், அதோ, ஒதுங்கி நிற்கிறான்! கலெக்டர், கொடியேற்றுகிறார்!! நோட்டீஸ் ஒட்டிய ரத்தினம், விரட்டப்படுகிறான்! தாசில்தார் — விளம்பரம் செய்கிறார்!! தடிதாங்கினோர், 'சல்யூட்' செய்கின்றனர் — தடியடிக்கு ஆளாகிய தர்மு, எங்கோ, கிடக்கிறான்!!

சுதந்திரமாம், சுதந்திரம்! யாருக்கு இன்று? யாரிடம் இருக்கிறது, இன்று? அமைச்சர், அதிகப் பணம் செலவிடுவேன், என்கிறார்! அதிகாரி, ஓடோடிவருகிறார்! பணக்காரர் தலைமைவகிக்கிறார்! ஆனால், அதன் இன்பத்தை நுகரவேண்டிய, ஏழை அவன் வழியே போய்க்கொண்டிருக்கிறான். ஏழு ஆண்டுகள்!! எவ்வளவு பெரிய, வீழ்ச்சி?

*

அச்சமில்லை! அச்சமில்லை!
அச்சமென்பதில்லையே!
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்...

அன்று இந்தச் சுதந்திர நாதம் தொண்டர்களின் மனதிலேமோதி, எரிமலைபோல் வெடித்தது! இன்றோ!! அந்தக் கீதத்தையும் வீரத்தையுமா, கேட்கமுடிகிறது? இதோ, காங்கிரஸ் கமிட்டி மெம்பர்! கேளுங்கள். சொல்வார்—

கவலையில்லை! கவலையில்லை!!
கவலையென்பதில்லையே!
காங்கிரசாட்சி இருக்கும் வரையில்
காசுக் கவலையில்லையே!

சட்டசபைக்குள் நுழைவோம்—

தேதி 11-8-54

சென்னை சட்டசபை.

மந்திரி மாணிக்கவேலர், பட்டியல் தருகிறார்.

1921 ஒத்துழையாமை இயக்கம்.

1928 | நாகபுரி கொடிப்போர்
1929 | சைமன் கமிஷன் பகிஷ்காரம்.

1930 உப்புசத்யாக்ரகம்.

1932 சட்டமறுப்பு இயக்கம்.

1933 தனிப்பட்டோர் சட்டமறுப்பு

1942 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம்.

மாணிக்கவேலர் இதில் எதிலும் கலந்துகொண்டவர் இல்லையே— எனிந்தப்பட்டியல் தருகிறார் என்று கேட்கிறீர்களா? சட்டசபையிலே, காங்கிரஸ் தியாகிகள் பற்றிய சலசலப்பு வ்ந்தது! மேற்கண்ட இயக்கங்களிலும், காந்தியார் அங்கீகரித்த எல்லா சத்தியாகிரகங்களிலும் கலந்து கொண்டோரெல்லாம் தியாகிகள்தான், என்று செப்பியிருக்கிறார்!!

அப்படிப்பட்ட தியாகிகளின் பிரச்னை, உறுப்பினர் ஒருவரின் கேள்வியால்வந்தது. சர்க்கார், மேற்கண்ட சத்யாக்கிரகங்களில் கலந்துகொண்ட எல்லோருக்கும் தியாக மான்யம் வழங்கியிருக்கிறதாம்! தியாகி ஆகாதவர் தெரிவிக்கிறார்!! காங்கிரஸ் தலைவர்கள் சிபார்சுசெய்த அனைவருக்கும் மான்யம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்—அவர்களில் பெரிய ஜமீன்தார்களும் உண்டாம் — இல்லாதவர்களுக்கு என்றல்ல, எல்லோருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறதாம்! அறிவிக்கிறார், மாணிக்கவேலர்!! தியாகம்செய்தோர், தியாகியாக இல்லாத இவரிடமிருந்து, மான்யத்தைப் பெற்றபோது என்ன எண்ணியிருப்பர் என்பது ஒரு புறமிருக்க, இப்படி கூலிகிடைக்குமென்று, 'கொட்டுமுரசே! கொட்டுமுரசே!!' என்று பாடியிருப்பர். ஒருபோதும், இராது! அந்த உண்மைத் தியாகிகள், இந்தச் சாதாரண மான்யத்துக்காக, தமது உயிரையும் உடலையும் பணயம்வைக்கவில்லை. அவர்கள் தமது நாட்டைப் பெரிதெனக் கருதினார்கள்! நாட்டின் நலத்தைப் பெரிதென எண்ணினார்கள்! அந்த நம்பிக்கையால், மக்களிடம் சென்றபோது, 'சுயராஜ்யம் வந்துவிட்டால் தேனும் பாலும் ஓடும்' என்று கூறினார்கள்!! அந்த நம்பிக்கைக்கு, காங்கிரஸ் அரசு, செய்த பலன் என்ன? மோசம்! லஞ்சம்!! எதிர்பார்த்ததுபோல, எங்கே, தங்களால் எதுவும்செய்ய முடியவில்லையென்று உண்மைத் தியாகிகள் சண்டைக்கு வந்துவிடுவார்களோ என்று பயந்தனும், அவர்களை வலையிலே வீழ்த்த, காங்கிரஸ் மந்திரிமார்கள் இப்படியொரு சதி செய்தனர்—மான்யங்கள் தந்து, வாயைமூடச்செய்தனர். இப்படிச் செய்ததால், விடுதலைப் போரின் வீரர்களுக்கு மாசு ஏற்பட்டது மட்டுமல்ல, நாட்டின் நலத்தைவிட சுயநலமே பெரிதெனும் சுபாவம் அதிகமாயிற்று. அதனைத் தூண்டிவிட்டன, பெரிய தலைகள்!! அந்த முறையால், ஒவ்வொரு காங்கிரஸ் தியாகியும், ஒவ்வொரு பிரச்னையாகி நாட்டின் அன்றாட விவகாரங்களில் எல்லாம் தலையிட ஆரம்பித்து, 'பெர்மிட் வேட்டை, 'லஞ்ச

வேட்டை’ ஆகியவைகளுக்கு வித்திட்டுவிட்டனர். நாடு, சோலையாகவில்லை! சோலையாக்கப் பாடுபட்டோர் சோம்பேறிகளாகிவிட்டனர்!! உடல் பருத்தபின், உடம்பு எப்படி வளையும்? இதனை உணராத பண்டிதர், காங்கிரஸ்காரர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்—உழையுங்கள்! உழையுங்கள்!!—என்று. ஏன், அவர்கள் உழைக்கவேண்டும்? கஷ்டமில்லாமல் சுகமும் வாழ்வும் பெறக்கூடிய வழிகள் தெரிந்தபிறகு, அவர்கள் ஏன் உழைக்கவேண்டும்? அது அறியாது கூவுகிறார், பண்டிதர் — தன்வினை தன்னைச் சுடும் என்பதுபோல— தாங்கள் காட்டிய பாதை தங்களுக்கே தீங்கு விளைவிப்பதைக் கண்டதும், ‘ஐயோ! சுதர்க்குல்லாய் அல்ல, நாட்டிற்கு தேவை, மூளை’’ பண்டிதர் — ஆர்ப்பரிக்கிறார்—அவர்களோ, சட்டைப் பைகளைப் பெரிதாக்கிக்கொண்டிருக்கிறார்கள்!! பணக்காரர்களை வட்டமிட்டு, வீழ்த்திக்கொண்டிருக்கிறார்கள் — அந்த வெற்றியில் புன்னகை புரிகிறார்கள். அவர்களைப் பார்க்கும் பாமரனுக்கு, வாயில்லாத ஏழைத் தொண்டனுக்கு, வாய்ப்பற்ற மோழைக்கு, “இப்படிப்பட்டவர்களுக்கு சுதந்திரம் வரவா, நாம் உழைத்தோம். ஐயோ!’’ என்கிற எண்ணம் வருகிறது. முகத்தை மறைத்துக்கொண்டு செல்கிறான்! சுதந்திரம் — பவுசை, இழக்கிறது!! சொல்கிறார், சுப்ரமண்யம், அதிகப் பணத்தைச் செலவழித்து அதனை கொண்டுவரப் போகிறாராம்!!

*

தியாகபரம்பரை தியாக மாறிச் சுடுமே என்ற பயத்தால், நன்மைகளைச் செய்யத் தவறிய அரசு, தியாகமான்யம் கொடுத்து அவர்களது உள்ளத்தை, சுநிக்குளையாக்கிற்று! நாடுமுழுமையும் நன்மைகள் மலரும் வழி ஏற்பட்டு விட்டால், தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் மான்யமா வழங்கவேண்டும். எதிர்பார்ப்பார்களா, அவர்கள்? இவ்விதம் அரசியல் தியாகத்தின் பேரில் கரும்புள்ளி குத்திய காங்கிரசினர் ஏழாண்டுக் காலத்தில் சாதித்ததென்ன! டில்லியைப் பார்த்தால், அயல் நாடுகளிலே வீற்றிருக்கும் அரசுத் தூதர்களைக் காட்டுகிறது—சென்னையைப் பார்த்தால், பதில் சொல்லமுடியாது திகைக்கிறது. காங்கிரஸ் தலைவர்களைக் கேட்டால், ‘சுதந்திரம் இப்போது தான் வந்தது. பொறுத்துப் பாருங்கள் புரியும், என்று கூறுகிறார்கள். சுதந்திரம் இப்போதுதான் வந்தது! என்கிறார்கள். சுதந்திரம் தந்துவிட்டுப்போன வெள்ளையன், தான் கட்டிய மாளிகைகளை இடித்தெறிந்தோ, அரசுக் காரியாலயங்களைத் தூள் தூளாக்கிவிட்டோ, நாட்டைப் பாழக்கிவிட்டோ செல்லவில்லை. பணம்! அரசு இயந்திரம்!— அத்தனையும் இவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டே சென்றான். அதனை வைத்துக்கொண்டு காரியமாற்றியிருக்கவேண்டிய இவர்கள், இன்னும் பொறுத்துப் பார்க்கச் சொல்லுகிறார்கள்! கடுமையான போருக்கு ஆளாகி, ஆலைகள் இடிந்து வீழ, மாளிகைகள் மண்மேடாக, கழனிகள் காடாகிட, கஷ்டநஷ்டங்களைச் சுமந்த மேற்கத்தி நாடுகள் யாவும் இந்த ஏழாண்டுக் காலத்திலே, எவ்வளவோ வளர்ச்சிகளைப் பெற்றுவிட்டன. இங்கோ, போரின் சாயல் கூடத் தென்படவில்லை! போரின் காரணமாகப் பல புதுப் பணக்காரர்கள் முளைத்தனர் — நஷ்டமடையாத நாடு இது! இந்நாட்டைக் கட்டியாளும் காங்கிரசார், இன்னும் பொறுத்துப்பார்க்கச்சொல்லுகிறார்கள் ஏழாண்டுகள். இன்னும்பொறுப்பதாம்!! எப்படி மக்கள் மனதில் மகிழ்ச்சி ஏற்படும்? எப்படி விழியில் இன்பம் அரும்பும்! வேதனைப்படுகின்றனர் யாவரும். அமைச்சர் சுப்ரமணியமோ, அந்த மக்களை மறந்துவிட்டு அதிகப் பணத்தைச் செலவழிப்பதால் சுதந்திர இன்பத்தைச் சொல்லுவேன்!—என்கிறார். மக்கள் மனதை நம்பாமல், பணத்தை நம்புகிறது, ஆட்சி!! ஏழாண்டுகள், எவ்வளவு பெரிய வீழ்ச்சி — காங்கிரசுக்கும், அது கொண்டுவந்த சுதந்திரத்துக்கும்.

கடப்பா, காட்சி!

பிரிவினையா? பேராபத்தன்றோ, அது!

*

ஒற்றுமையைக் குலைக்கும். பகையை வளர்க்கும்.

*

சிதறுண்டு சின்னாபின்னமாகுமே தேசம். வேற்றுமைகள் வளர்ந்து விடுமே.

*

திராவிட நாடாமே, திராவிடநாடு! ஆந்திரா, பிரிந்துவிட்டது. கேரளம் பிரியப்போகிறது. கன்னடம், தனியாகக்கூடும். எப்படி ஏற்படும், திராவிட நாடு?

*

மொழிவாரியாகப் பிரிந்துவிட்டால், பிறகு, இவர்கள் கூறும் திராவிட நாடு எப்படி ஏற்படமுடியும்?

* * *

இப்படிக் கேட்பவர்கள், பலர்! அவர்களுக்கு, அதோ அந்தக் காட்சியைக் காணீர், என்று சுட்டிக்காட்டுகிறோம்!! இருவர் சந்திக்கிறார்கள்—அவர், இவரைப் பாராட்டுகிறார். இவர், அகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார். சமீப காலம் வரையில், அந்த இருவரும், சேர்ந்திருந்தவர்கள்தான். அண்மையில் தனியாகச் சென்றனர்! அவர், தன் மாகாணத்தை ஆளும் பொறுப்பிலிருக்கிறார்—இவரும், ஒரு மாகாணத்தில் ஆட்சி நடத்துகிறார். இருவரும் அமைச்சர்கள்! எவ்வளவு, அன்போடு, கனிவு சொட்ட உரையாடுகின்றனர்.

“நண்பரே! உமது வரவு கண்டு மகிழ்கிறோம். உமது சேவையைப் பாராட்டுகிறது, எம் பூமி. அதன் சின்னமாக நாங்கள் கட்டியிருக்கும் புதுத் தேக்கத்தைத் திறந்துவைக்க வேண்டும்’’

மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க, நீங்கள்! ஒற்றுமையுடன் பாடுபட்டால், ஜகத்தில் இன்பம் பெறலாம். நீங்கள் காட்டிய அன்புக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன்.’’

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 22—8—54 [ஞாயிறு

கருத்தளிக்கும் நண்பர்கட்கு

★

கவர்னர் சம்பளச்செலவு குறைக்கப்பட்டாகவேண்டும் — அதற்கான கிளர்ச்சி நடத்தப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டால், தயங்காமல் நடத்தத்தான் வேண்டும், அரசியல் சட்டத்திலே இடமிருக்கிறதா, ஆளவந்தாராகியுள்ள காமராஜரின் மனதை நோகச்செய்யலாமா, எதற்கெடுத்தாலும் கிளர்ச்சிதானா, எப்போதும் போர் முழக்கந்தானா, என்றெல்லாம் கேட்டுக் குத்திடும் தோழரின் போக்குப்பற்றிக் கவலை வேண்டாம்; கவர்னருக்காகச் செலவிடப்படும் தொகை மிகமிக அதிகம், தேவையற்ற பெரும் சுமையாகி விட்டது அந்தச் செலவு, என்று ஆர்வத்துடன் பல தோழர்கள் கருத்துரை அளித்துள்ளனர். தொடர்ந்து அவைவெளியிடப்பட்டு வருகின்றன. நாட்டிலே இந்தக் கிளர்ச்சிக்கு, எத்தகைய மகத்தான ஆதரவுகிடைக்க இருக்கிறது, என்பதை உணர்கிறோம், உளம் பூரிக்கிறோம்.

'ராயபுரத்தில் கூடிக்கொண்டு நாலைந்து சிறுவர்கள் நடத்தும், கட்சி' என்று நையாண்டி செய்யும் நண்பர், இந்தக் கருத்துரைகள் கண்டு, தெளிவும் பெறமாட்டார், திருத்திக்கொள்ளவும் மாட்டார்; அவ்வளவு சாமான்யரல்ல அவர்! மாறாக, விஷமிகள்! விஷயமறியாததுகள்! விளையாட்டுச் சிறுவர்கள்! சினிமா கட்சியினர்! என்ற சீற்றச் சிந்துதான் பாடுவார்! பாடி மகிழட்டும், நாடு காணட்டும் நல்லார்வம் எப்பக்கம் திரண்டுவருகிறது என்பதை.

கவர்னர் சம்பளச்செலவு குறைக்கப்படுவதற்கான கிளர்ச்சி நடத்தப்படவேண்டிய அவசியம் எழக்கூடும், என்று நாம் கூறியது, ஏதோ காமராஜருக்குக் கசப்பும் கவலையும் மூட்டுவதற்காக, என்று சிலர், தவறாகக் கருதுகிறார்கள். ஒருவர்—நம்மிடம் ஒப்பற்ற உள்ளன்பு கொண்டவர்! திராவிடர் கழகம் காமராஜரை ஆதரிக்கிறது, இதுகண்டு மனம்பொறாமல், நாம் சர்க்காருக்குச் சங்கடம் உண்டாக்க, கவர்னர் சம்பளச் செலவு குறைப்புக் கிளர்ச்சி நடத்தப்போவதாக மிரட்டுகிறோம் என்று குற்றம்சாட்டுகிறார்! காமராஜர், இந்த அளவுக்கு இத்தகைய குணவான்களின் கூட்டுறவையும் நேசத்தையும் விரும்புகிறாரா, என்பது நமது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட விஷயம்! நாம் சாமான்யர்களான மக்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறோம், 'கனம்'களிடம் அல்ல! நாம் யார் மீதும் காழ்ப்புக்கொண்டு எத்தகைய கிளர்ச்சியும் செய்பவர்களல்ல! பார்வைமூலமே போரழைப்புவிடும் அரசியல் சிலம்பக் கூட்டத்தாரல்ல, நாம்! மக்களின் ஆதரவு உண்டா, இந்தச் சமயத்திலே தேவையான கிளர்ச்சி இது என்று அரசியல் தெளிவு உள்ளவர்கள் உணருகிறார்களா, என்பதைக் கண்டறிந்தே காரியத்தில் ஈடுபடுவோம், நமக்கு நமது சக்தியும் தெரியும், குறைபாடுகளும் தெரியும்! கிடைக்கக்கூடிய துணையின் அளவும் தன்மையும் கணக்கிடமுடியும், மூட்டிவிடப்படக்கூடிய பகையின் தன்மைபற்றியும் யூகித்தறியமுடியும்! போரிவாளர் நாம் என்பதால் அல்ல—பித்தனல்லவா அங்ஙனம் எண்ணிக்கொள்வான்—மக்களின் கருத்துரையைப் பெறுவதால்! இது போது, தோழர்கள்பலர் தீட்டியனுப்பும் கடிதங்கள், அறிவும் ஆர்வமும் தருகின்றன, மகிழ்கிறோம்.

நாட்டிலே, இப்போது ஏற்பட்ட அரசியல் மாற்றம், வரவேற்கத்தக்க மாற்றம்—மறுக்கவில்லை.

காமராஜர், நமது மனம் மகிழத்தக்க வகையில் நடந்துகொண்டார்—நன்றியறிதலுடன், அவரைப் பாராட்டுகிறோம். எனவே அவர் மீது ஏதோ கோபம் கொண்டோ அல்லது அவரை ஆதரிக்கும் பணியினைக் 'குத்தகைக்கு' எடுத்துக்கொண்டது போலாகி, நம்மைக் குத்திக் குத்திக் குதூகலிக்கும் குறியறியாக் குணவானுக்கும் காமராஜருக்கும் நேசமும் பாசமும் வளருவதைக் கெடுக்கவோ, நாம் கவர்னர் சம்பளச் செலவு குறைக்கப்படவேண்டியதற்கான கிளர்ச்சி துவக்க முற்பட்டோமில்லை. நீண்ட நாட்களாகவே, நாம் இக்கருத்தைக் கொண்டிருக்கிறோம். கவர்னரின் சம்பளச் செலவு மிக மிக அதிகம், தரித்திரம் தலைவிரித்தாடும் இந்த நாட்டுக்கு இந்தப் பெரும் செலவு கூடாது என்று, மக்களிடம் எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். நமது மாநாடுகளிலே தீர்மானங்கள் நிறைவேற்றியுமிருக்கிறோம்.

"சர்க்காரின் தலைவர் என்ற பெயரால் சிருஷ்டித்த பதவியான கவர்னர் பதவிக்கென ஆண்டு தோறும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட வரிப் பணத்தை, வீணாக விரயம் செய்துவரும் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, கவர்னரின் சம்பளத்தை உடனடியாகக் குறைத்தாகவேண்டும் என்ற கிளர்ச்சியை எல்லா முற்போக்குக் கட்சிகளும் துவக்கவேண்டுமென்று இம்மாநாடு அன்பழைப்பு விடத் தீர்மானிக்கிறது"

நாம் நிறைவேற்றிய தீர்மானம் இது! அப்போது காமராசர் முதலமைச்சருமல்ல, வரக்கூடும் என்று

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. இரண்டாவது மாநாடுகள்
ஆக. 21, 22 தேதிகளில் காஞ்சியில் நடைபெறும்

'ராசி பலன்' கூறினவர்கள்கூடக் கிடையாது. திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாடு லால்குடியில் நடைபெற்றபோது, நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். 26-4-53! நாம், அவசரப்பட்டோ அருவருப்படைந்தோ, ஆத்திரத்தாலோ, இந்தக் கிளர்ச்சியைத் துவக்கும் போக்கினரல்ல. காமராஜர் 'கனம்' ஆகாத காலத்தில் அவருடைய 'காதலுக்குத் தவம் கிடைக்கும் பேறே பெரும்பேறு என்று கூறி அரசியல் ஊசி குத்தும் காலம் பிறக்கக்கூடும் என்று எவருமே எண்ணியிருக்க முடியாத நாட்களில், கவர்னர் சம்பளச் செலவு குறைக்கப்படவேண்டும், அதற்கான கிளர்ச்சியை முற்போக்குக் கட்சிகள் துவக்கவேண்டும் என்று லால்குடி மாநாட்டில்—டால்மியாபுரத்தை கல்லக்குடியாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றிய அதே மாநாட்டில் நிறைவேற்றி இருக்கிறோம். புதுப் பாணமுமல்ல, பகைப் பாணமுமல்ல!! கருத்தளிக்கும் நண்பர்களின் கடமை உணர்ச்சிக்கு நன்றி கூறிக்கொள்கிறோம். நாடு நன்றாக உணரட்டும், இந்தக் கிளர்ச்சியின் அவசியம்பற்றி. ❀

15-ஆண்டுகளுக்குப் பிறகு!

இப்படியெல்லாம், எதற்கும், எச்சரிக்கை விடும் முறையில் பேசுகிறாரே, "யார் இவர்" என்ற சந்தேகம் இயல்பாகவே எவருக்கும் உண்டாகக்கூடியதுதான். இப்படி எச்சரிக்கைவிடும் ஆசாமி ஒரு 'ஏனோதானோ' வாக இருக்கமுடியாதே, விஷயம் அறிந்தவர்—பொறுப்புவாய்ந்தவர் — நாலுபேர் கவனத்தை ஈர்க்கக்கூடியவராகத்தான் இருக்கமுடியும் என்ற எண்ணமும் எவருக்கும் தோன்றத்தான் செய்யும்.

ஆமாம், உண்மைதான்! நமக்கெல்லாம், ஏன்—ஓரளவு உலகம் முழுவதற்கும் தெரிந்தவர்தான்—விஷயம் அறிந்தவர்தான்-பொறுப்பு வாய்ந்தவர் என்று கூறக்கூடிய நிலைமைக்கு வரவேண்டியவர்தான்—நாலுபேர் கவனத்தை ஈர்க்கக்கூடியவர்தான்—டாக்டர் ஆ. இராமசாமி (முதலி)யாரைத்தான் குறிப்பிடுகிறோம்.

அண்மையில், கல்கத்தாவில், ஒரு கூட்டத்தில் பேசுகையில்தான் எச்சரிக்கை மழையைப் பொழிந்திருக்கிறார்.

"மொழிவழி அரசா? கூடாது—ஆகாது— ஆபத்து — ஜனநாயகம், ஒற்றுமை எல்லாவற்றுக்குமே இது பெரிய ஆபத்தை உண்டாக்கிவிடும் —எனவே, இத்தகைய கிளர்ச்சிகளில் எவரும் ஈடுபடக்கூடாது" என்ற எச்சரிக்கையை டாக்டர் ஆ. இராமசாமி அவர்கள் விடுத்துள்ளார்.

இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பிரயோஜனமாக இருந்திருக்கலாமென்றும், தற்போதைய நிலைமையில் இவற்றைக் கையாளக்கூடாதென்றும், இவை அகிம்சா முறையில் செய்யப்படும் பலாத்காரங்கள் என்றும் எச்சரிக்கிறார்

ஜனநாயகப் பண்பும் ஒற்றுமை இயல்பும் இல்லாத இங்கிலீஷ்காரன் ஆட்சியில் செய்யப்பட்ட காரியங்களை இப்பொழுதும் செய்யலாமா என்று இடித்துக் கேட்கிறார், இராமசாமியார். மொழிவழி அரசுக் கோரிக்கை, எந்தவிதத்தில் ஜனநாயகப் பண்பையும் ஒற்றுமையையும் குலைத்துவிடும் என்பதற்கு அவர் விளக்கந் தரவில்லை. ஆனால் ஒரு விளக்கம்மட்டும் தந்திருக்கிறார். அதாவது, எது, ஜனநாயகத்தையும் ஒற்றுமையையும் பாழாக்கும் என்று ஏ. ஆர். சொல்கிறாரோ, அது, இன்னும் எண்ணிப் பதினைந்து ஆண்டுகளில், அந்தக் கொடுமையைச் செய்யாதாம். மொழிவழி அரசுக் கோரிக்கையும், அதற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியும் பதினைந்து ஆண்டுகள்வரை செய்யப்படாமல் இருந்து அதன் பின்னர் செய்யப்பட்டால் ஜனநாயகம், ஒற்றுமை எல்லாமே நல்ல முறையில் இருக்கும் என்பது நம்முடைய டாக்டரின் அரசியலறிவால் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சியாகும். இந்த உண்மையை அத்தகைய கிளர்ச்சிக்காரர்கள், மனதில் வைத்துப் பதினைந்து ஆண்டுகள் வரை பொறுத்திருந்து கிளர்ச்சி செய்தால், அப்போதுதான், அப்படிப்பட்ட கிளர்ச்சியால் பயன் பெற முடியுமே தவிர, இன்றைய கிளர்ச்சிகளால் ஜனநாயகம் சரிந்து —ஒற்றுமை பிளந்து — நாடே பாழாகிவிடும் என்று எச்சரிக்கை செய்கிறார். வரவேற்கிறோம். ஆனால், இன்றைக்கு, ஒற்றுமையையும் ஜனநாயகத்தையும் பாதிப்பதாகச் சொல்லப்படும் மொழிவழி அரசுக் கோரிக்கை, இன்னும் 15 ஆண்டுகள் கழிந்தால், ஏன், அது, தன்னுடைய வேலையைச் செய்யாதென்பதுதான் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருக்கிறது.

அரசியல் வானில் அடிக்கடி வட்டமிடும் நமது ஆர்க்காட்டார் கூறுவதிலும் 'விஷயம்' இல்லாமல் இருக்காது என்று சிலர் கருதக்கூடும்.

இன்றைய ஜனநாயக சர்க்கார், வெள்ளைக்கார ஆட்சிமுறையின் முழு வடிவத்தைப் பெற இன்னும் பதினைந்து ஆண்டுகள் ஆகும் என்ற ஆரூடத்தின்பேரில் ஏன் ஆர்க்காட்டார் இவ்விதம்கூறியிருக்ககூடாது என்று சிலர் கேட்டால், அது சற்றுச் சிந்தித்துப் பார்த்துப் பதில் கூறவேண்டிய கட்டத்தில் கொண்டு வந்து நம்மை நிறுத்துவதாகத்தான் உள்ளது. என்றபோதிலும், இன்றைய சர்க்காரை எப்படியாவது வெள்ளைக்கார ஆட்சியின் முழு வடிவத்தையும் பெற்விடாமல் பாதுகாக்கவேண்டியவர்கள், ஆர்க்காட்டாரின் இந்த யோசனையை ஒரு போதும் வரவேற்கமாட்டார்கள். இந்த விஷயத்தில் பெரிதும் அக்கரைகொண்ட நாமும் இந்த யோசனையை ஒப்புக்கொள்வதற்கில்லை.

நடப்பது ஜனநாயக ஆட்சி என்று கூறப்பட்ட போதிலும், காண்பது வெள்ளைக்கார ஆட்சிமுறைதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு இரகசியம் என்றபோதிலும், கஷ்டப்பட்டுப் பெற்ற சுதந்திரம் நிலைபெறவேண்டுமென்று

நினைப்பவர்களில், நாம் (தி. மு. க. மற்றவர்களுக்கு இம்மியும் பின் வாங்கியவர்கள் அல்ல என்பதை இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்தி வைக்கிறோம்.

அதே சமயத்தில், பெற்ற சுதந்திரத்தை இன்னும் பலம் பொருந்திய அரசாக்கும் பணிகளில்ஒன்றுதான் மொழிவழி அரசுக்கோரிக்கை என்பதையும், அதனைமேலும் நல்ல பலம் பொருந்தியதாக ஆக்குவது தான் நாம்கோரும் இனவழி அரசுக் கோரிக்கை, அதாவது திராவிடநாடு திராவிடருக்காவது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மொழி வழி, இனவழி அரசுக் கோரிக்கைகள், எந்தக் காலத்திலும், எந்தவித அரசியல் தீமையையும் உண்டாக்கி விடாது என்ற சிறந்த உண்மையை உணரும் ஆற்றல் பெற்றுவிட்டால் ஆர்க்காட்டார் என்ன, அவனியிலுள்ள எந்த அரசியல் வாதியும் நம்முடைய பாதை தவறான வழிக்கு இழுத்துச் செல்கிறதென்று தவறியும் சொல்லமாட்டார்கள். ஆனால், உண்மையை உணரும்வரையில் சிலருக்கு சில்லரை விஷயங்களில்தான் கவனம் சென்று கொண்டிருக்கும். அதைக் கவனியாமல் காரியமாற்றுபவர்களுக்குத்தான் கடைசியில் வெற்றி கிடைக்கும்.

⊛

7-ம் பக்கத் தொடர்ச்சி

அவர், ஆந்திரத் துணை முதலமைச்சர் சஞ்சீவிரெட்டி! இவர், சென்னை முதலமைச்சர் காமராஜர்!! இருவரும், சந்தித்தது, கடப்பாவில். சஞ்சீவிரெட்டி அன்போடு அழைக்க, காமராஜர் சென்றிருக்கிறார், பொது விழாவில் கலந்து கொள்ள.

ஆந்திரப் பிரிவினை ஏற்பட்டபோது, என்னென்ன சொல்லினர்! தெலுங்கரையும் தமிழரையும் மோதவிட்டு இடையில் வழியும் இரத்தத்தைக் குடிக்கவேண்டுமென்றெண்ணிய குள்ளநரிக் குணம் படைத்தோர் — கூறியது எவ்வளவு!! அவர்களுக்கு, அகமகிழும் காட்சி. அதோ, காணீர்! எனக் காட்டுகிறோம். இத்தகைய காட்சிகள், இன்பமுடன் நடைபெறவேண்டும் என்கிற நன்னோக்கத்துடன்' கேட்கப்படுவதுதான், 'திராவிட நாடு. ஆந்திரரும் தமிழரும் தத்தமது எல்லைகளைச் சரிவரப்பராமரிக்க வேண்டும்! கன்னடியரும் கேரளரும் தத்தமது பூமியைச் செழிப்புள்ளதாக்கப் பாடுபடல் வேண்டும்! அதற்கான ஒத்துழைப்பை, நேசத்தை நால்வரும், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், வளர்த்துக்கொள்ளவேண்டும். சுகம் துக்கம் இரண்டிலும் பங்கு கொள்ள வேண்டும். சோதரர்போல் வாழ வேண்டும்!! பொது ஆபத்து வந்தென்றால், நால்வரையும்தற்காத்துக் கொள்ளும் முன்னேற்பாடு வேண்டும்—என்ற குறிக்கோள்கொண்டது தான், திராவிட நாடு.

பொது ஆபத்து — என்பது, வெளியாரால் விளைவது.

அந்த வெளியாரின் பட்டியலில், கடல்கடந்துகிடக்கும் அந்நியர்கள் மட்டுமல்ல, மொழியால் கலாச்சாரத்தால் வேறுபடும் வடநாட்டையும் குறிப்பிடுகிறோம். வடவர் பூமி, பொருளாதாரத்தில், இமயமலை! அரசு ஆதிக்கத்தில் மகாமேரு!! அதனுடன் ஒன்றாகக்கிடப்பதால், தெற்கு அழிகிறது—தென்னாடுகள் வளம் பெறும் வாய்ப்பில்லை. அதனைத் திரட்டிடும் நோக்கத்தில் கேட்கப்படுவதே, திராவிடநாடு!

*

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம்—இந் நான்கினையும், கட்டியாளும், பேராசையால் கோரப்படுவதல்ல, திராவிடநாடு. நான்கும் தனியாட்சி நடத்தும்—சோலைக் கிளிகள் சுதந்தரமாகப் பறந்து திரிவதைப்போல! வல்லூறு கொத்த வரின், சேர்ந்து நின்று எதிர்க்கும்!! இந்தத் தூய நோக்கத்துக்கு, மாசு கற்பிப்போர், கடப்பாவில் நடைபெற்ற காட்சியினைக் கருத்தில் ஏற்க வேண்டும். ஆந்திரம் பிரிந்தது—அதனால், மீளாத மாச்சரியமும், குறையாத வெறுப்பும், கூத்தாடும் என்று எதிர்பார்த்தனர் பலர். பிரிவினையால் பேதமன்றோ வளரும்? என்று பேசியோரும், உண்டு. ஆனால், காண்பதென்ன! காங்குலுக்குகிறார், சஞ்சீவிரெட்டி—களிக்கிறார் காமராஜர். இந்த நட்பு அதிகமாகவேண்டும் என்கிற ஆசையின் விளைவே, திராவிட நாடு! வேண்டாம், முடியாது. என்று எண்ணிடவேண்டும்—குறைகூறுவோர். பிரிவினை கேட்பதால், குடுமியைப் பிடித்துக்கொண்டு மல்லுக்கு நிற்க வேண்டும் என்பதல்ல பொருள்! குத்தும் வெட்டும் நடக்கவேண்டும், என்பதல்ல குறிக்கோள்!! கூடிவாழ முடியும் கோலாகலமாக இருக்கவும் முடியும். கடப்பாகாட்சி, உணர்த்துவது, அதைத்தான்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

என்றோ?

[அ. முத்தையா, 'லயோலா' கல்லூரி]

இந்தியா சுதந்திரம்பெற்றதென்றார்
இன்னல்களொன்றும் குறையவில்லை
விந்திய மலைபோல் துயரங்கள்
விரிந்து கிடப்பது பாரறியும்!

மக்களின் உள்ளக் கொதிப்பதையே
மந்திரி என்போர் அறிவாரா?
பக்கம் பக்கமாய் மேடையிலே
படிக்கவும் பேசவும் தானறிவார்!

உணவுப் பெருக்கம் செய்வதற்கு
ஓர் கூட்டமொன்று கூடுகிறார்!
தினவு எடுத்து தினறும்வரை
தின்பதற்கே அது, வாய்ப்பாகும்!

மந்திரிப்பதவி அடைவதற்கோ
மக்களின் உதவியை நாடுகிறார்!
தந்திரம் வெற்றி பெற்றபின்னர்!
தலைகீழ்ப் பாடம் படிக்கின்றார்!

நாட்டின் நிலைமையைச் சீர்திருத்தி
நல்லவை செய்வோம் என்கின்றார்!
ஏட்டில் உள்ள எண்ணமெல்லாம்
என்று பெறுமோ உருவங்கள்?

'திவ்யபாதம்' தேவையாம்!

"காலேதான், மாமா! ஆனால் கருந்துரங்கு!!"

"எப்படியிருந்தால் என்னடி—நமக்குக் காரியம்தானே முக்கியம்?"

"இந்திரனே! சந்திரனே!-ன்னு, எப்படி மாமா, இந்த அகோரத்தைக் கொஞ்சறது......"

"அடி, அசடு. நடிப்புத்தாண்டி நம்முடைய முதல். அருகிலே, போ. பேசு! இருதயம் துடிக்குதேன்னு ஏங்கணும். ஒரு நோட்டு விழணும் கையிலே! பெருமூச்சு ஒண்ணுவிடணும். இன்னொரு நோட்டு! ஜாக்ரதையா நடந்துக்கோ சமயம் வரப்ப கண்ணிலே கொஞ்சம் நீரைக்காட்டு! காலி, அவன் மணிபர்ஸ்!!"

*

"தவியாத் தவித்தேன் அத்தான்! தங்களைக் காணுதகண் என்ன கண், என்று கலங்கினேன்!! தங்களுடைய திவ்ய பாதத்தைக் காணும் பாக்யம் கிடைக்குமோ என்று ஏங்கினேன். தங்கமான உங்களைச் சந்திக்க வேண்டும் என்பதற்காகவே இந்த அங்கத்தை வைத்துக்கொண்டிருந்தேன்! இனி எனக்கென்ன? இதோ, இருக்கிறேன், உங்கள் அடியாள்! அடித்தாலும், அணைத்தாலும், கொஞ்சினாலும் கோபப்பட்டாலும்—இனி, எனக்கு நீங்கள்! உங்களுக்கு நான்!!"

*

இரண்டு காட்சிகள்! இடையிலேயிருக்கும் சம்பவங்கள், பல!! கனவான் கட்டிலிலே சாய்ந்துகிடக்கிறான், பேசிடும் பெண்ணின் கன்னத்தையும் மாங்கனியையும் ஒப்பிட்டு.

கன்னியோ, அவனுடைய கனமான மணிபர்சுக்காக, கண்ணில் நீரையும் குரலில் மென்மையையும் காட்டுகிறாள்.

காரியம், முடிகிறது! — இருவருக்கும்.

பிறகு......?

விடையை, எல்லோரும் அறிவோம்! ஆனால் ஆட்சியை நடாத்தும் நமது அரசியல் கட்சியினர் அறிவரோ, எனும் அச்சம், வரவர அதிகமாகிக்கொண்டே போகிறது, நமக்கு. வலைவீசும் வனிதையர், புதிய பூபதிகளை இழுக்க, கையாளும் சாகசமும் தந்திரமும் பலர் அறிந்த விஷயம். அதற்கு மயங்கி, அருக்கு மங்கையர் மலரடி வருடச் சென்று, அங்கம் நொந்து பங்கப்பட்டு வருவோரின் கதையும் புரிந்ததே! ஆனால் நமதரும் ஆட்சியினர், அதனை அறியாராகி, மோசவலையை மோகன மாலையென்றெண்ணுகின்றனர்!

கட்டாந்தரையே கட்டில்! கையே தலையணை!! என்று, நம்பியிருப்பவனை மறந்து, நாடறிந்தவளின் வீட்டு அம்சதூளிகா மஞ்சத்தில் புரண்டு, பன்னீரில் குளித்து பழரசம் அருந்துவதால், புகழ்வரோ, நல்லோர்? அதனை மறந்தனர் போலும், இவர்கள்!

அரைநிர்வாணக்கோலத்தில் ஆங்கில நாட்டில் பவனிவந்தாராம், காந்தியார். "ஐயா, ஏனிந்தக்கோலம்?" என்று ஒரு நண்பர் கேட்டதற்கு, "இந்தளவுக்கு ஆடையுடம்பைப் போர்த்தும் துணிகூட இல்லாமல் அவதிப்படுவோர் ஏராளமிருக்கின்றனர், என்னுடைய நாட்டில்!" என்று பதிலளித்தாராம். அத்தகைய உத்தமரின் திருப்பெயர் சொல்லித்திரியும் தேசிய நண்பர்கள், இன்று அகமகிழ்கின்றனர்—தாசியின் வலைக்குப் பலியான, 'மைனர்' கூறுவதுபோல.

அலங்காரமாகப் பவனிவந்தார்.

அடடா! என்ன, போலீஸ் மரியாதை.

மகாராஜாவின் குடும்பத்தினர்மட்டுமே ஏறிச் செல்லும் வண்டியில், இவரும் ஏறிச் சென்றார்.

காங்கிரஸ் மந்திரிகளுக்குக் கிடைக்கும் வரவேற்புகளைப்பற்றி, இவ்வண்ணம், ஆச்சரியத்தையும் அகமகிழ்ச்சியையும் அள்ளி வீசுவதுண்டு, அவர்கள். அண்மையில், அன்பர் ராசேந்திர பிரசாத், மைசூர் மாநகரில் பல தினங்களைக் கழித்தாராம். அப்போது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளைக் குறித்து வானளாவப் புகழ்கின்றன, ஏடுகள். மகாராஜா ஏறிச்சென்ற வண்டியிலேயே, பிரசாத் சென்றாராம்! ராஜோபசாரங்கள் விதவிதமான முறையிலே நடைபெற்றனவாம்!! பத்திரிகையில் வரும் படத்தைக் காட்டி, பதில் என்ன கூறுவோம் என்பதைப் பெருமிதத்துடன்எதிர் பார்க்கின்றனர், தேசிய நண்பர்கள். பிரசாத்–இந்தியத் தலைவர். அவருக்கு, இவ்வளவு ஆடம்பரங்களும் வரவேற்புகளும் நடைபெறுகின்றன! ஆச்சரியத்துக்குரிய அம்சம் இதில் என்ன? எந்தப் பீடத்தில் இன்றைய தினம் பிரசாத் அமர்ந்திருக்கிறாரோ, அதே பீடத்தில் அற்றைநாள் வெள்ளையன் வீற்றிருந்தபோது, அவர்களுக்கும் இதேவித ராஜோபசாரங்கள் நிகழாமல் இல்லை. எனவே, புதிய விஷயமல்ல! பெருமிதப்படவேண்டிய சக்தியுமல்ல!! "இந்த ராஜாக்கள் எல்லார் ஒருகாலத்தில் எப்படியிருந்தனர்? இப்போது கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகின்றனர்!" என்று கித்தாப்பு பேசுவதற்குரிய விஷயமல்ல இது. அவர்கள் அப்படித்தான் நடப்பார்கள்! யார் ஆட்சியிலிருந்தாலும் அவர்கள் அப்படித்தான் நடப்பார்கள்!! அதுவா, மகிழ்ச்சிக்குரிய செய்தி. தாவித்தாண்டிக் குதித்த வெம்புலி, பசுபோலக் கூண்டுக்குள் வலம் வருகிறதென்று சொன்னால், மனிதர்மீது அளவிலா அன்புகொண்டுவிட்டதென்று பேதையும் கூறுவன்!...சமயம் பார்க்கிறது அல்லது தன்னுடைய நிலை இதுதான் என்று புரிந்துகொண்டு நடக்கிறதுஎன்பது பொருள்!! அதனை உணராது, ஆகா புலி மிரள்கிறது என்று புளகாங்கிதம் அடையமுடியுமா?

ராஜாக்கள் போற்றுகின்றனராம்! அவர்கள் போற்றவேண்டும், அலங்காரமாகப் பவனிவரவேண்டும் என்பதற்காகவா, அன்று தியாகத்தீயில் குளித்தனர், இந்தச்சீலர்கள்,

யாருடைய பாராட்டும் வாழ்த்தும் கிடைக்கவேண்டுமோ, அவன் வீதி நாய்போல, விசாரக் குப்பையில் கிடக்கிறான்! ஆனால், யாருடைய புகழ்மாலை வெகுசாதாரணமோ, அதனைப் பெற வேட்டை நடக்கிறது!!

“ராஜர்கள் அழைத்தனர்—தாங்கள் அனுபவிக்கும் வசதிகளையெல்லாம் செய்து தருவதாகச் சொல்லி, அழைத்தனர். ஆனால் எம்தலைவர் என்னசெய்தார் தெரியுமோ? ‘நானோர் தொண்டன்!! அவர்கள் மத்தியில், ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் விரும்பவில்லை, நான். தாங்கள்கூட இவ்வளவு அலங்காரங்களை வைத்திருக்கவேண்டுமா என்று ஆலோசித்து வருகிறேன். ஆகவே, மன்னிக்கவும்!– என்று பதிலுரை தந்துவிட்டார்!! இதுவன்றோ, தேசபக்தி. காந்தியடிகளின் சீடர் என்பதற்கு அத்தாட்சி” என்று செப்பவேண்டிய காங்கிரஸ் நண்பர்கள், ராஜர்கள் வலம் வருவதையும், பணக்காரர்கள் சுற்றிக்கிடப்பதையும் தங்களுக்கோர் பெருமை என்றெண்ணுகின்றனர் — பலமிராசுதார்கள், சொந்த மனைவியின் அருமை பெருமைகளைவிட, தாசியின் நேச பாசத்தைப்பற்றிப் பெருமையுடன் பேசுவது போல!!

*

ஒரு காலத்தில், தேசீய நண்பர்களை, மாமாவிடம் கேலி செய்யும் அந்தி நேரத்து அழகிகளைப்போல, கேலி செய்துகொண்டிருந்தோர் தாம், ஆலையரசரும், பூமியரசரும். அவர்கள், இன்று அடிவருடவும் தயார் என்கின்றனர். என்ன அர்த்தம்? அன்பர்பிரசாத் கோலார் தங்கவயலுக்குச் சென்று பார்வையிட்டாராம்! அதுபோது, தங்கம் தோண்டும் கம்பெனியார், அவரை வரவேற்று, வாழ்த்துரை வழங்கினராம். போனவர், தலைவர்! வரவேற்றவர், கம்பெனியார்!! அந்த வரவேற்பில், பிரசாத்தையல்ல, இரண்டு அரசுகளை, வானளாவப் புகழ்ந்திருக்கிறார், கம்பெனியின் அலுவலரான சீனிவாசன் என்பார். “ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் பாதம் பட்டதும் கல்லாகிக் கிடந்த அகல்யாபெண்ணுகமாறியதுபோல், மைசூர்சர்க்காரும், டில்லிசர்க்காரும் தங்களுடைய ‘திவ்யபாதங்களை’ இங்கே வைத்தால், அடியிலேயிருக்கும் தங்கம் எல்லாம் வெளியில் வரும்! கருணை காட்டக் கோருகிறேன். இரண்டு இடத்திலும் இருக்கும், தேசபக்த சீலர்கள், தன்னலங் கருதாத்தலைமையாளர்கள், எங்கள் கோரிக்கையை ஏற்பார்கள் என எதிர்பார்க்கிறேன்!!”

பேசியவர், ஆலையரசர்! பூமிக்கடியிலே கிடக்கும் தங்கத்தை வெட்டியெடுத்து வியாபாரம் செய்பவர்! கனிவோடு கூறுகிறார்—தேசபக்த சீலர்களாம்; ஆள்வோர்!! இத்தனை நாளும் பிறர் அறியாரா? அல்லது இவர்தான் அதனைச் சொல்லவேண்டுமா? தன்னலம் கருதாத் தலைமையாளர்களாம்!! அவர்களது ‘திவ்யமான கடாட்சம்’ கிடைத்தால் ராமபிரானின் திவ்யபாதம்பட்டு புனர்ஜென்மம் பெற்ற அகலிகையைப்போல், புதுவாழ்வு பெறுமாம், அந்தப் பொன் சுரங்கங்கள்!! ‘திவ்ய பாதம்’ என்று வர்ணிக்கிறார்—சீலர்களே என்கிறார் — தன்னலங் கருதாதவர்களே என அழகுபட வர்ணிக்கிறார். இத்தனையும் எதற்கு? தமது கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க! தாசி, ‘அத்தான்! உங்கள் அடியாள், நான்’ என்று ஏன் கூறுகிறாள்? காசு பறிக்க! அதுபோலவே, இவர்களும் தளுக்கி மினுக்குகிறார்கள்!! ராமபிரானின் திவ்ய பாதம் போன்றதாம், டில்லி, மைசூர் அரசுகளின் கடாட்சம். அது கிடைத்துவிட்டால், அடியிலே கிடக்கும் பொன், வெளியிலே மின்னுமாம்! அதற்கு ஒத்துழைப்பு தேவையாம்—“ஆகவே, தன்னலங் கருதாத் தலைமையாளர்களே, தியாகசீலர்களே, எங்களுக்கு வரிகளை அதிகமாகப் போடாமல் வசதிகளைச் செய்து தாருங்கள்” என்று கேட்கிறார், சீனிவாசன். ஆலையரசர் தந்த வரவேற்புபசாரத்தின் சாரம் இது!!

அதனைப்பெற்ற அன்பர் ‘ஜனாதிபதி’ என்ன சொல்லியிருக்கவேண்டும்? “ஐயா, சீனிவாசா! பூமிக்கு அடியிலே, இரத்தத்தை வியர்வையாக்கி, உயிரைத் தூசுபோல் மதித்துப் பாடுபடும் பாட்டாளியா, நீர்? முதலாளிதானே! அவனவன் சோற்றுக்கே அல்லாடும்போது உம்முடைய சொந்தச் சுகங்களைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டால் என்ன? அதிக லாபம் வரவில்லை! ஆகவே, உதவி செய்யவேண்டும்—என்று கேட்கின்றீரே. அதிக லாபம் ஏன்? உழைத்தும் உலர்கின்றனரே தொழிலாளர்கள் — அவர்களைப் பாரும்; நீரும், கொஞ்ச நாளைக்குச் சிரமத்தைப் பாராமல், கஷ்டப்படும்! ஏனென்றால், நாடு சுதந்திரம் அடைந்து ஏழாண்டுகள் தானே ஆகியிருக்கிறது என்று சொல்லியிருக்கவேண்டும்? அவ்விதம் தானே பொதுஜனங்களிடம் பேசும்போது கூறுகின்றனர்! ஆனால். பிரசாத் பேசவில்லை! எப்படிப் பேசுவார்? மோகனத் திரையும், முகஸ்துதியும்தான், கண்ணையும் கருத்தையும் மறைக்கிறதே!! எனவே, “அவசியம் கவனிக்கச் செய்கிறேன்” என்று கூறியிருக்கிறார்.

*

ராஜப்பிரமுகர் என்கிற பெயரால் கோடிக்கணக்கில் பணம், கொட்டியளக்கப்படுகிறது! அதனைப்பெறும் ராஜப்பிரமுகர், அலங்காரப் பவனி நடத்துகிறார். சிறுபோலீஸ் அதிகாரி வயிற்றுப்பசி தாங்காது, கைநீட்டி ஏதாவது வாங்கிவிட்டால், தீர்ந்தது அவன் உத்யோகம். அதற்குப் பெயர், லஞ்சம்!! ஆலையரசர், நாடு தன்னுடைய வேட்டைக் காடாக விளங்கவேண்டும் என்கிற நப்பாசைக்காக, “திவ்யபாதா! திருவருள் தரலாகாதா! என்று கேட்கிறார் — அமைச்சர்களை, ஆண்டவன் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார். தாசி, பேசுகிறாள்! மைனர் மகிழ்கிறார்!! சொந்தமனைவியெனும் நாடோ, தன்னரும் மக்கள் சிந்தும் கண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் அன்பர்களோ, காட்சிகாணீர்!—எனக்காட்டி களிக்கின்றனர். தங்கச் சுரங்கத் தோழர்களோ, தாயகம் மக்களுக்குத் தானே சொந்தம்—ஒரு சிலர் ஏன் அதற்கு உரிமை கொண்டாடி ‘கம்பெனி’ வைத்திருக்கவேண்டும், என்று குமுறுகின்றனர். குமுறலைக் கேட்கப் போகவில்லை, பிரசாத்! கம்பெனி காட்டிய கனிவோடு திரும்பி விட்டார்!! ✯

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்துச் சொல்கிறோம். ரூபாய் 2000 கோடி செலவழிக்கப் பட்டதாகச் சொல்லுகிறார்கள். இருந்தும், நம் நாடு ஏன், சுபிட்ச மடையவில்லை? அது செலவழிக்கப் பட்ட இடமும், முறையும் வேறு! வடநாட்டிலே, அணைக்கட்டுகளுக்காக ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது. அந்த அளவுக்கு நம் நாட்டுக்கு செலவழிக்கப்படவில்லை. அந்தப் பணத்தைக் கொண்டு, ஆடம்பரமாகவும், அந்தஸ்தாகவும் வாழுகிறது டில்லி. நம் நாடோ அவதிப்படுகிறது. இது தான் நோய், இதற்குள்ள மருந்தென்ன! திராவிட நாடு!! வடவரின் பிடியிலிருந்து விடுபட்டு நம்முடைய நாட்டை நாமே ஆண்டு கொள்வது. அப்படிச்செய்தால்தான் நாம் நோயற்றவர்களாகி, இன்பம் காணமுடியும்! எனவேதான், திராவிட நாடு பெற்றாகவேண்டும் எனக் கூறுகிறோம். இந்த ஒரு வேலையை முடித்துவிட்டால் போதுமா! அதற்குப் பிறகு எப்படியிருக்கவேண்டும், என்பதற்கும் ஆலோசனை கூறுகிறோம் அது தான், இன்றிருக்கும் ஆட்சி முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்பது! இப்போதிருக்கிற ஆட்சி, ஏழைமக்களுக்கான ஆட்சி அல்ல. நேற்று ஒருவர், அவசர அவசரமாகஎன்னைப்பார்க்கவந்தார். எதற்கு வருகிறார், என்று எண்ணினேன். வந்ததும், தான் காங்கிரஸ் சார்பில் ஜில்லாபோர்டு தேர்தலுக்கு நிற்கப் போவதாகவும், தன்னை நிற்கும்படி காங்கிரஸ் பெரியவர்கள் வற்புறுத்துவதாகவும் சொன்னார்! ஆச்சரியப்பட்டேன் — ஏனெனில் அவருக்கும் காங்கிரசுக்கும் ஸ்நான பிராப்திகூடக்கிடையாது. அண்மையில் நடைபெற்ற எம். எல். சி. தேர்தலில்கூட, காங்கிரசல்லாத ஒருவருக்காகவே ஓடியாடி அலைந்து வேலை செய்தார். அப்பேற்பட்டவருக்கு இப்போதுஎன்னவந்தது?—என்று எண்ணினேன். அவரை நிற்கும்படி, காங்கிரஸ் பெரியவர்கள் வலியுறுத்துகின்றனராம்!

காங்கிரஸ் இன்று பணக்காரர்களையும், பட்டக்காரர்களையும் நோக்கி ஓடுகிறது. காரணம், இன்று அது, பணக்காரர்கள் கட்சியாகிவிட்டது! அதன் நிழலுக்குச் சென்றால்தான் தாங்கள் வாழமுடியும் என்று பணக்காரர்களும் ஒரு முடிவுக்குவந்து விட்டனர்! அப்பேற்பட்ட கட்சியால், நாட்டில் வாழும் ஏழை மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட முடியும்? எனவேதான், இத்தகைய ஆட்சிமுறையே, மாற்றியமைக்கப் படவேண்டும், என்று நாங்கள் கூறுகிறோம்.''

*

ஆட்சி முறை மாற்றியமைக்கப் படவேண்டும், புது ஆட்சி மலர வேண்டும், சமுதாய மலர்ச்சி ஏற்படவேண்டும் என்ற கொள்கைகளை விளக்கிப் பேசுகையில், அதுபற்றி நாம் நடந்துகொள்ளவேண்டியவகையினையும் எடுத்துரைத்தார்! "கட்சி மாச்சரியங்களை, கழகத் தோழர்கள் அதிகமாக்காது அவர்களிடம் எல்லாம் நமது கொள்கைகளை எடுத்து விளக்கவேண்டும். நாடு, இன்று நம் குரலுக்கு காது கொடுக்கிறது! இந்த நல்ல நிலைமையைத் தோழர்கள் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். பிறர் கூடாரத்துக்குள் செல்லவும்வேண்டும்! பிறரை நம் இடத்துக்கு அழைத்துவரவும்வேண்டும்!! அவர்கள் எந்தக் கட்சியானாலும், பார்ப்பனரானாலும் பிறரானாலும், அவர்களிடமெல்லாம் கலந்து பழக வேண்டும், நமது கொள்கைகளை எடுத்துச் சொல்லவேண்டும்—அதையே குடுமிபிடிச் சண்டையாக ஆக்கிடாத மனப்பண்பும் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகள் உருவானால், நாம் விரும்பும் எந்தப் போராட்டத்திலும் வெற்றிபெற முடியும்!'' என்றார்.

போராட்டம் என்றால், நமது தோழர்களுக்கு, கன்னல்சாறு தானே! அதனையும் காட்டிக் கொள்ளத் தவறவில்லை — ஆரணி வட்டாரத் தோழர்கள்!! அவர்கள் அளித்த வரவேற்புப் பத்திரங்களிலே குறிப்பிட்டிருந்தார்கள், "அக்கிரமமாக ஒரு கவர்னருக்கு கொட்டியளிக்கப்படும் கொள்ளையை நிறுத்த—உடனே ஒருவழி செய்ய வேண்டும்! உங்கள் கட்டளையை ஏற்கக்காத்திருக்கிறோம், நாங்கள்!!'' என்பதாக. நீதியின் பக்கம், நமது தோழர்களின் கவனமும் கருத்தும் ஓடோடிவருவது இயல்புதானே? அந்த உற்சாகம் தென்பட்டது, அவர்கள் முகத்தில்! அந்த உற்சாகமும், கண்ணியமும் தானே, நம்முடைய சொத்து!! — அவைகளைக் கண்டபோது, களித்தேன்!

★

புதிய தங்க வயல்

நெடுங்காலமாகத் தங்கம் எடுக்கப் பட்டுவந்தகோலார் தங்கவயல் பகுதியில் புதியதங்கவயல் ஒன்றை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்களாம். இந்தச்செய்தி உண்மையானால், பழைய தங்கவயலில் வேலை செய்து வந்த தொழிலாளர்களுக்கு இது ஓர் சிறந்த வாய்ப்பாகும்.

நாவலரின் சிறந்த வரலாற்று நூல்

பண்டைக் கிரேக்கம்

[இரா. நெடுஞ்செழியன், எம். ஏ]

விலை ரூ 1—0—0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

15. நிருபர்களின் வேட்டை

"அதெப்படி சார். 'அலிபி'யை ருஜுப்பிக்கமுடியும் நல்லமுத்துவை நேற்றிரவே நேரில் பார்த்த ஆறுமுகம் இங்கிருக்கும்பொழுது?"

"அப்படியாம்மா........அவன் லேபர் கமிஷனரோடேயே இருந்தேன் என்று கூறினான்...........!" என்று இழுத்தார் இன்ஸ்பெக்டர்.

பொய்......சுத்தப்பொய்! உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயம் தெரியாது, சார்! இந்த புரட்சிப் பசங்களுக்கு ஆபிஸர்கள்கூட பலபேர் நெருங்கிய நண்பர்கள்! ஆமாம் உங்கள் போலிஸ் இலாகாவில் கூடப் பலபேர் உண்டு. எப்போதாவது ஆபத்தில் மாட்டிக் கொண்டால் அவர்கள் தயவில், தப்புவித்துக் கொள்ளவழி உண்டாக்கிக் கொள்வர். ஆகவே மிகவும்முன் ஜாக்கிரதையாக இந்த ஆட்களுடைய சேஸை நடத்தணும்!" என்றாள்.

புஷ்பா கூறியது எதுவும் ஆதிமூலத்திற்குத் தெரியாததல்ல. ஆதிமூலம் போலிஸ் இலாகாவின் மூலம் அவைகளைத் தெரிந்து கொண்டார். புஷ்பா, நல்லமுத்துவோடு நடத்திய காதல் நாடகத்தின் மூலம் இதைத் தெரிந்து கொண்டாள். அவ்வளவுதான் வித்தியாசம்!

"என்னமோ பார்க்கலாம்......" என்று இழுத்தவண்ணமே வெளியேறினார், ஆதிமூலம். பாஸ்கர் தலையில் கை வைத்தபடியே அப்படியே உட்கார்ந்துவிட்டார். "எதற்கும் துணிந்த பசங்கள்...ஹும்...அவன்களைத் திட்டி என்னபயன்? எல்லாம் என்னுடைய பைத்யக்காரத்தனம்!" என்று அழுகையோடு கூடியகுரலில் கூறிக்கொண்டே எதிரில் இருந்த சோபாவில்போயமர்ந்தாள், புஷ்பா. ஆறுமுகம்பேசாமல் அந்த இடத்தை விட்டுநகர்ந்தான். தலையைக் குனிந்த வண்ணமே கார் ஷெட்டிற்கு வந்து சேர்ந்தான்.

'அலிபி' என்றால் என்னவென்று இப்பொழுது அவனுக்கு லேசாகப் புரிந்தது. சேச்சே! இந்தமாதிரி கூட வழக்கு மாறலாமென்று அவன் சிந்திக்கவேயில்லை. ஆதிமூலம் கூறியபடி நல்லமுத்து நேற்றிரவு 'பாக்ய பவன'த்திற்குள்ளேயே வரவில்லை என்று ருஜுப்பித்துவிட்டால், அவன்கதி என்ன? ஐயோ...! அந்தமாதிரி நடந்தபின் வழக்கு எப்படி மாறுமோ? முன்பே அவன் வீட்டைப்போய் சோதனைப் போட்டு நல்லமுத்து கொடுத்த பிரசுரங்களை எடுத்துவந்து விட்டனர் போலிஸ்காரர்கள். நல்ல வேளையாக அந்த நேரத்திலே புஷ்பா அவனைக் காப்பாற்றினாள். அவள் அவனுக்காகப் பரிந்து பேசியிராவிட்டால், அவனைத்தானே குற்றவாளி என்று பிடித்திருப்பார், ஆதிமூலம். புஷ்பாவிற்கு உண்மையாகவே நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன் அவன்.

ஒருவேளை நல்லமுத்து 'அலிபி' ருஜுப்பித்தால் பின் என்ன நடக்கும்?

ஆறுமுகத்தின் மனதில் இந்தக் கேள்வி திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தது.

ஒருவேளை மறுபடியும் தன் மேலேயே சந்தேகப்படுவார்களோ?

அப்படிச்சந்தேகப்பட்டால்தான் எதைக்கொண்டு அவர்கள் அவனை இந்த வழக்கில் இழுக்க முடியும்?

மறுபடியும் உத்தமநாதபுரத்திலே அவன் குடிசைக்குச் சென்று சோதனை போடுவர். அங்கே இனி என்ன கிடைக்கப் போகிறது?

ஒருவேளை தன் வீட்டிலே ஒன்றும் கிடைக்காத காரணத்தால், பொன்னியின் வீட்டிற்குப் போனால்......!

'ஐயோ...!' என்று அடிவயிற்றிலிருந்து எழுந்த பயக்குரலைத் தொண்டையில் நிறுத்தி துள்ளி எழுந்தான் ஆறுமுகம். சேச்சே! என்ன பைத்யக்காரத்தனமான காரியத்தை செய்துவிட்டான்.

'இரண்டு மோதிரங்கள். மூன்று நூறு ரூபாய்நோட்டுகள், மணிபர்ஸ் இவைகள் எல்லாம் ஆதிமூலத்தின் கையில் கிடைத்தால்......? அவன் கதி அதோகதிதான். இல்லை. அந்தளவு அவன் ஏமாறக்கூடாது. சிறு அளவு கூட ஆதாரமில்லாமல் தப்பிக்க வேண்டுமானால் சீக்கிரம் அவன் பொன்னியின் குடிசைக்குப் போக வேண்டும். துணியில் சுற்றிவைக்கப்பட்டிருக்கும் அந்த மோதிரங்களும் பணமும் யார் கண்ணிலும் படாமல் மறைக்கப்படவேண்டும். ஐயோ! பொன்னிக்கு எப்படியும் ஆபத்து வராமல் இருக்கவேண்டுமே. தப்பித்தவறி அவளைப் பிடித்துப் போலிசார் உதைத்தால்...... அந்தப் பயத்திலே அவளே அந்த முடிச்சை எடுத்துப் போலிஸாரிடம் கொடுத்து விட்டால்.........சேச்சே! எந்தளவு பைத்யக்காரத்தனமாக அந்த முடிச்சை அவளிடம் கொடுத்து விட்டுவந்துவிட்டான். இனி அவன் சீக்கிரம்போய் அந்தத் தவறைச் சரிசெய்ய வேண்டும்! அப்பொழுது

தான் நல்லமுத்துதான் நேற்று பாக்கியபவனமே வரவில்லை என்று உறுதியாகக் கூறித் தப்பித்துக் கொண்டால் கூட அவன்மேல் குற்றம் வராதவாறு பாதுகாத்துக் கொள்ள முடியும். அவன் சீக்கிரம் பொன்னியைப் போய்ப்பார்க்க வேண்டும்.

இந்தவிதமாக யோசனையில் ஆழ்ந்திருந்த ஆறுமுகத்தின் காதில் திடீரென்று புர்....புர்ரென்று நாலைந்து கார்கள் மறுபடியும் பாக்யபவனத்திற்குள் வரும் சப்தம் கேட்டது. "மறுபடியும் போலீஸா...?" என்ற பயத்தோடு துள்ளி எழுந்து ஷெட்டை விட்டு வெளியே வந்து பார்த்தான் ஆறுமுகம்.

மூன்று கார்கள் வந்து நின்றன. அவைகளைப் பார்த்தால் போலீஸ் கார்களாக தெரியவில்லை. அவைகளிலிருந்து இறங்கியவர்களும் போலீஸ் இலாகாவிற்குச் சம்பந்தப்பட்டவர்களாகத் தெரியவில்லை. யாரோ ஏழெட்டுப்பேர் கோட்டும், சூட்டுமாக இறங்கினர். அதிலே சிலர் ஜிப்பாகூட போட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள்யாராக இருக்கக்கூடும் என்று ஆறுமுகத்தால் யூகிக்க முடியவில்லை. அவர்கள் வந்திறங்குவதைக் கண்டதும் உள்ளேயிருந்து வாயிற்படிக்கு வந்தார் மானேஜர் சாம்பசிவம்.

அவருக்கு வணக்கம் செலுத்திய வண்ணமே அவரோடு உள்ளே சென்றனர், வந்தவர்கள். ஆறுமுகமும் அவசரமாக ஓடிப்போய் மாடிப்படியருகில் மறைந்து நின்றவண்ணம் அவர்களுடன் மானேஜர் என்ன பேசிக்கொள்கிறார் என்று கேட்க ஆரம்பித்தான். மாடி ஓரத்தில் நின்றபடியே உள்ளே ஹாலில் நடக்கும் சம்பாஷணையைத் தெளிவாக ஆறுமுகத்தால் கேட்க முடிந்தது.

"நான் 'தினமித்திரன்' பத்திரிகையின் பிரதிநிதி!"

"நான் "ஈவனிங் நியூஸ்" நிருபர், சார்!"

"சென்ட்ரல் நியூஸ் ஏஜன்சி!"

"அகில இந்திய ரேடியோ பிரதிநிதி!"

இப்படி வந்திருந்த ஒவ்வொருவரும் தாங்கள் யார் என்பதைச் சுருக்கமாகத் தெரிவித்துக் கொண்டனர்.

மானேஜர் சாம்பசிவம் பேசாமல் நின்று கொண்டிருந்தார். புஷ்பாவும், பாஸ்கரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஒரு நிமிஷ நேரம் மௌனம் நிலவியது, பிறகு பாஸ்கர்தான் பேச ஆரம்பித்தார்.

"நீங்கள் எல்லோரும் வந்தது பற்றி, மிகவும் மகிழ்ச்சி. ஆனால் இப்பொழுது உங்களிடம் கூற வேண்டிய புதிய விஷயம் எதுவுமில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்!" என்றார்.

"தெரிவிக்க வேண்டிய விஷயம் எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது!" இது 'காலை செய்தி' நிருபர் கூறிய வார்த்தைகள்.

"உங்களுக்கென்ன இதில் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது?" என்று கோபமாககேட்டார் பாஸ்கர்.

"சார்—சார்! கோபித்துக் கொள்ளாதீர்கள்! உங்கள் தந்தையார் மறைந்துவிட்ட இந்த நேரத்தில் நாங்கள் தொல்லை கொடுக்க விரும்பவில்லை. ஆனாலும் உண்மையான குற்றவாளியை மக்கள் முன் நிறுத்தி நாட்டு மக்களின் தீர்ப்புக்கு விட வேண்டியது எங்கள் கடமையல்லவா?" என்று சமாதானம் கூறினார் 'ஈவினிங் நியூஸ்' நிருபர்.

"நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம்! சும்மா இருந்தால் குற்றம் செய்தவன், தானே தண்டனை அடைவான்!" என்று அலுத்துப் போய்க் கூறினார் பாஸ்கர்.

'காலை செய்தி' நிருபர் விடுவதாயில்லை, 'உங்கள் தந்தையார் இது மாதிரி இதற்கு முன் சொல்லாமல் வெளியே சென்றதுண்டா, சார்!" என்றார்.

அவர்களிடம் எது பேசினாலும் சமாளிக்க முடியாதென்று உணர்ந்த பாஸ்கர் மெதுவாக பதில் சொல்ல ஆரம்பித்தார்.

"இதுவரை எங்களுக்குத் தெரிவிக்காமல் வெளியில் சென்று ஒரு நாள் பூராவும் தங்கியதில்லை, சார்!"

"நேற்று முன் தினம் எத்தனை மணிக்கு சார், அவர் வெளியில் சென்றார்?"

"சுமார் ஆறு மணி இருக்கும்!"

"எத்தனை மணிக்கு சார், திரும்பி வந்தார்?"

"இரவு பத்து மணி இருக்கலாம்........"

"அப்படியானால் திரும்பிவந்ததையே நீங்கள் பார்க்கவில்லையா?"

"என் டிரைவர் கொண்டுவந்து விட்டிருக்கிறான்!"

"அப்படியானால் டிரைவரைத் தவிர வேறு யாருக்கும் அவர் திரும்ப வீடுவந்தது தெரியாதா?"

"தெரியாது......!"

இதற்குள் 'ஈவினிங் நியூஸ்' நிருபர் குறுக்கே நுழைந்தார்.

"உங்கள் தந்தையாருக்கு உடல் நலக் குறைவாக இருந்ததாமே?"

"ஆமாம்"

"இரத்த அழுத்தம் அதிகம், இருதய பலவீனம்......!"

"அதனாலே அதிகமாக அலையக் கூடாதென்றும், உணர்ச்சிவயப்பட்டு இரத்த ஓட்டம் அதிகமாகக் கூடிய முறையில் காரியங்கள் செய்தால் ஆபத்து என்றும் டாக்டர் கூறியிருக்கிறாராமே?"

"ஆமாம்! எங்கள் குடும்ப டாக்டரைக் கூடப்பார்த்துவிட்டீர்களா!" என்று வெறுப்போடு கூறினார் பாஸ்கர்.

'காலை செய்தி' பத்திரிகை நிருபர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

"அப்படியானால் டாக்டரின் ஆய்வுரைக்கு எதிராக நடந்துகொண்ட காரணத்தால் உங்கள் தந்தையாருக்கு ஏதாவது ஆபத்து நடந்திருக்கலாமா........"

"இருக்கவே முடியாது. அப்படியானால் நல்லமுத்து ஏன் இரவு பத்து மணிக்கு எங்கள் பங்களாவுக்குள் வந்திருக்கவேண்டும்?"

"நல்லமுத்து வந்ததற்கும் உங்கள் தந்தையார் மறைவுக்கும் சம்பந்தமிருக்குமென்று நிச்சயமாக நம்புகிறீர்களா?"

"என்னுடைய நம்பிக்கை இதிலே... என்ன செய்யப்போகிறது. வெளியே சென்ற என் தந்தையார்

இரவு திரும்பிவந்தார். பின்னாலேயே நல்லமுத்து வந்ததை என் டிரைவர் பார்த்திருக்கிறான். காலையில் என் தந்தையாரைக் காணவில்லை! அவ்வளவுதான் நடந்த விஷயம். இனிப் போலீசும் கோர்ட்டும் முடிவுசெய்யவேண்டிய விஷயம் இது!" என்று சுருக்கமாகக் கூறி எழுந்தார். அதற்குள் 'தினமித்திரன்' நிருபர் கேள்வி ஒன்றை போட்டார். "ஏன், சார்! உங்கள் தந்தை யாருக்கு விரோதிகள் வேறு யாருமே கிடையாதா?" என்றார்.

"என் தந்தையார், நண்பர்களோடுதான் பழகுவது!" என்று அழுத்தமாகக் கூறினார் பாஸ்கர்.

"இல்லை... அவர் திரும்ப பங்களாவிற்கு வந்தார் என்பதற்கு உங்கள் டிரைவரைத் தவிர வேறுயாரும் சாட்சியமில்லையா......ஒரு வேளை வேறு விரோதிகள் யாராவது, அவருக்குத் தீங்கிழைத்திருக்கக் கூடாதா?" பாஸ்கருக்குக்கோபமாக வந்தது. வெளியே வந்தவண்ணமே, "பத்திரிகை நிருபர்களுக்குள்ள வழக்கமான சந்தேகக் கேள்விகளைக் கேட்டு என்னிடமிருந்து நீங்கள் எதையும் பெற முடியாது. நான் கூறியதுதான் உண்மை. இதில் மறைக்கப்பட்டது எதுவுமில்லை. நீங்கள் போகலாம்!" என்றார்.

'காலை செய்தி, நிருபர் முன்னால் வந்து ஆபத்தான கேள்வி ஒன்றை கேட்டார்.

"ஏன், சார்! உங்கள் டிரைவரை நாங்கள் சந்திக்கலாமா...!"

பாஸ்கர் அவரை முறைத்துப் பார்த்தார். "அது அவசியமில்லை...!" என்று பல்லைக்கடித்துக் கொண்டு கூறினார்.

பத்திரிகை நிருபர்கள் அத்தனை பேர் முகத்திலும் திடீர் மாறுதல் ஏற்பட்டது. இதற்குள் சாம்பசிவம் முன்னால்வந்து, "அவனைப் பார்த்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், சின்ன ஐயாவேதான் எல்லாம் கூறிவிட்டாங்களே!" என்று அசட்டுச் சிரிப்போடு கூடினார்.

'தினமித்திரன்' நிருபர் சிரித்துக் கொண்டே "பார்ப்பதுகூட. தவறானதா சார்!" என்றார். பாஸ்கர் பேசாமல் நின்றுகொண்டிருந்தார். சாம்பசிவம் நிலைமையைச் சமாளிப்பது எப்படியென்று தெரியாமல் "அதெல்லாம் தவறு ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு ஒதுங்கி நின்றார்.

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஆறுமுகத்திற்கு இருதயத்துடிப்பு ஆரம்பமாகிவிட்டது. அந்த 'தினமித்திரன்' நிருபருக்கு எவ்வளவு திமிர் இருக்கவேண்டும்! "உங்கள் டிரைவரைத் தவிர வேறு சாட்சியில்லையா?" என்றால் ஆறுமுகம் சாட்சியில் சேர்க்கப்படக் கூடாதாவனா? அப்படியானால் உத்தமநாதர் மறைவுக்கு வேறுகாரணங்களையும் விளக்கங்களையும் தர, இவர்கள் முயற்சிக்கின்றனரா? ஒரு வேளை நல்லமுத்துவைத் தப்புவிக்க இவர்கள் ஏதாவது சூழ்ச்சி செய்கின்றனரா? இவர்களை ஏன், பாஸ்கர் அப்படி வெறுப்பாக நடத்துகிறார். பாஸ்கருக்குப் பத்திரிகை நிருபர்களைப்பிடிக்கவில்லை என்றால், அதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். எப்படி இருந்தாலும் அவனுடைய பெயரும் இந்தகேஸில் அதிகமாக அடிபடுவது தவறு. ஆகவே இந்த நிருபர்களிடம் மாட்டிக் கொண்டு அவதிப்படுவதைவிட தப்பிப்பதேமேல் என்று மெதுவாக மாடிப்படிகளில் ஏறினான், ஆறுமுகம்.

இதற்குள் "ஆறுமுகம்! ஆறுமுகம்!" என்று மானேஜர் கூப்பிடும் குரல் கேட்டு திரும்பிப்பார்த்தான்.

ஹாலிருந்து மானேஜர் வெளியில் வந்து கொண்டிருந்தார். அவர் பின்னாலேயே அந்த நிருபர்களும் வெளியே வந்தனர்.

"ஓ! நீதான் ஆறுமுகமா!!" என்று இழுத்தவண்ணமே தன் காமிராவை எடுத்து தூக்கி ஒரு படம் பிடித்தார் 'தினமித்திரன்' நிருபர், ஆறுமுகம் திரும்பி அவர்களை சரியாகப் பார்ப்பதற்குள் எல்லா நிருபர்களும் 'கிளிக்' 'கிளிக்' கென்று அவனைப் படம் பிடித்து விட்டனர்.

"வீண் தொந்தரவு செய்யாதிங்கோ, சார்! அவன் உலகம் தெரியாத அறிவிலி!" என்று ஆறுமுகத்தை அறிமுகம் செய்து வைத்தார் மானேஜர்.

'சேச்சே! எங்களுக்குத் தெரியாதா, என்ன?" என்று கூறிக் கொண்டே மாடிப்படி அருகில் வந்தார் 'காலை செய்தி' நிருபர், அவர் பின்னாலேயே எல்லா நிருபர்களும் வந்து நின்றனர்.

ஆறுமுகத்திற்குப் பயம்தலையைச் சுற்றியது. வெடவெடத்த கைகளுடன் பரிதாபமாக மானேஜரைப் பார்த்தான்.

"ஆறுமுகம்! இவர்கள் நம்மூர் பத்திரிகை நிருபர்கள், கேட்டதிற்கு உண்மையான பதில் சொல். அதனால் உனக்கு ஒன்றும் ஆபத்து வராது. நேற்று இன்ஸ்பெக்டரிடம் கூறியதை இவர்களிடமும் கூறு!" என்று ஆறுமுகத்திற்குத் தைரியமூட்டினார் சாம்பசிவம்.

அவர் கூறியதை புரிந்துகொண்டவன் போல ஆறுமுகமும் தலையைக் குனிந்து கொண்டுபேசாமல் நின்று கொண்டான்.

"நேற்று முன்தினம் மாலை, உங்கள் எஜமானரை எங்கு அழைத்துச் சென்றாய், டிரைவர்!" என்று ஆரம்பித்தார் தினமித்திரன் நிருபர். ஆறுமுகம் தலையைக் குனிந்தபடியே பதில் சொல்ல ஆரம்பித்தான். தன் கண்களில் வெளிவரும் பயத்தை அவர்கள் கண்டு பிடித்துவிட்டால் ஒரு வேளை தனக்குப் பெரிய ஆபத்து வருமோ என்ற அச்சம் ஆறுமுகத்தை அடக்கமான மனிதனாக்கியது.

"லேபர் கமிஷனர் ஆபிஸுக்கு ......!"

"திரும்ப பங்களாவிற்கு வரும் போது மணி என்ன இருக்கும்?"

"இரவு பத்து மணி இருக்கும்!"

"அன்றிரவு நீ திரும்பப் போகும் போது இந்த பங்களாவிற்குள் யார் நுழைவதைப் பார்த்தாய்?"

"நல்லமுத்துவை......!"

'காலைசெய்தி' நிருபர் திடீரென்று ஒரு குறுக்குக் கேள்வியைக் கேட்டார்.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.